விலை ரூபா: 10.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 01 வெள்ளிக்கிழமை (16.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 362

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாவின் நவீனமான தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டது

சீமெந்து

## வலம்புரியின் பணியாளர்கள் நேற்று படையினரால் சோதனை

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நாவலர் வீதியை அண்மித்த பகுதிகளை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய படையினர் வலம்புரியின் பணியாளர்களையும் தீவிர சோதனைக்குட்படுத்தியதுடன் அச்சுறுத்தியும் உள்ளனர்.

நேற்றுக் காலை கடமைக்காக வந்த எமது பணியாளர்கள் காரியாலயத்திற்கு அருகில் நின்ற இராணுவத்தினரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தாம் பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் என்பதனை தெரியப்படுத்திய போதிலும் அவர்களிடமிருந்த உடைமைகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அடையாள அட்டைகள் இன்றி வந்தவர்கள் சில மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டனர். இதனால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்க நேரிட்டது.

இதேவேளை பத்திரிகையாளர்கள் மீதும் பத்திரிகை அலுவலகம் மீதும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ச)

## யாழ். நகரை அண்டிய பகுதிகளில் இராணுவம் நேற்று பாரிய தேடுதல்

### பயப்பீதியில் யாழ்.மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் நேற்றுக்காலை துப்பாக்கிகள் சகிதம் பெருமளவு இராணுவத்தினர் தீவிர தேடு தல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.


இதனால் அப்பகுதிகளில் பெரும் பதற்றம் நீடித்தது. நேற்றுக்காலை 6 மணிமுதல் சுமார் 4 மணித்தியாலங்களாக நாவலர் வீதி மற்றும் பிறவுண் வீதிப் பகுதிகளில் பெருமளவிலான இராணுவத்தினர் கடும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.


யாழ்.நகரை அண்டிய சந்திகள், ஒழுங்கை முகப்புகள் உள்ளிட்ட முக்கிய இடங்களிலும் வீதியோரங்களிலும் நேற்றுப் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

பிறவுண்வீதியால் சென்றவர்களை வழிமறித்த இராணுவத்தினர் அவர்களது அடையாள அட்டை (12 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி மகிந்த-ரணில் இணக்கம்

## நேற்றைய சந்திப்பில் அறிவிப்பு





(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏகமனதாக இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

இருவருக்கும் இடையில் அலரிமாளிகையில் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து விரிவான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது. சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக இடம்பெற்ற இச் சந்திப்பின்போதே மேற்படி இணக்கம் காணப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## "நமது ஈழநாடு" அலுவலகம் படையினரால் சோதனை

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள "நமது ஈழநாடு" பத்திரிகை அலுவலகம் நேற்று இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. நேற்றுக்காலை யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய படையினர் நேற்று காலை 6.30 மணியளவில் பத்திரிகைக் காரியாலயத்திற்குட் புகுந்தனர்.

அங்கு ஆசிரிய பீடம், நிர்வாகப்பகுதி மற்றும் இயந்திரப்பகுதிகளுக்குச் சென்று துருவித்துருவி சோதனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்த ஊழியர்களையும் விசாரணை செய்த படையினர் அடையாள அட்டையைக் காட்டுமாறு வற்புறுத்தியதாகவும் "நமது ஈழநாடு" வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## மக்கள் படைப் பிரதிநிதிகள் கண்காணிப்புக்குழுவுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

பொங்கியெழும் மக்கள் படையின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று மாலை சந்திப்பொன்று இடம் பெற்றது.

நேற்று மாலை 4மணியளவில் கோயில் வீதியில் உள்ள கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றி வளைப்புக்கள், தேடுதல்கள், அச்சுறுத்தல்கள் போன்ற பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் இடம்பெற்று வருவது குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளது.

அவ்வாறான மிரட்டல்கள் தொடர்வதை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்றும் இத்தகைய ஒடுக்கு முறைகளையும் சிறிலங்கா இராணுவத்தின் அடக்கு முறைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மக்களின் இயல்பான வாழ்விற்கு வழிசமைக்கப்படாவிடின் தொடர்ந்தும் சிங்கள ஆயுத ஒடுக்கு முறைக்கு எதிராககிளர்ந்தெழுந்து பொங்கியெழும் மக்கள்படை போராட தயாராக இருக்கின்றது என்றும்இச் சந்திப்பில் கூறப்பட்டுள்ளது. (ஞ)

## வலிகாமம் மேற்கிலும் நேற்று தீவிரசோதனை

வலிகாமம் மேற்குப் பகுதிகள் நேற்று இராணுவத்தினரால் கடும்சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. வாகனங்களில் சென்ற அனைவரும் இறக்கப்பட்டு அவர்களின் பொதிகள் இராணுவத்தினரால் துருவித்துருவி சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

வட்டுக்கோட்டை, சங்கானை, பொன்னாலை ஆகிய பகுதிகளில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இச் சோதனை நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

சைக்கிள் ,மோட்டார்சைக்கிளில் சென்றவர்களின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டதுடன் உடற் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டது. இதன் காரணமாக வலி காமம் மேற்குப் பகுதிகளில் மக்கள் அச்சத்துடன் காணப்பட்டனர். (ச-49)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு இல்லையேல் யுத்தம் தான்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் கண்டிப்பாக யுத்தத்துக்கு திரும்புவார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் வரவு - செலவு திட்ட அறிக்கை மீதான விவாதத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன் பேசுகையில்;

இலங்கையில் அனைத்து இனமக்களும் துயர் அடைந்திருக்கும் நிலையில் பேரினவாதம் தொடர்கிறது. பேரினவாத சக்திகள் ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை முடக்கிவிட்டார்கள். மகிந்தவின் சிந்தனைகள் நடைமுறைப்படுத்த இயலாத ஒன்று. வங்கிகளிலிருந்து அரசாங்கம் கடன் பெற்றாலோ,கூடுதல் பணம் அச்சடித்தாலோ பொருளாதார சீரழிவுதான் ஏற்படும். வடக்கு கிழக்கிற்கு 650 மில்லியன் ரூபா ஒதுக்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலையில் இந்தத் தொகையை எப்படி அவர்கள் திரட்டமுடியும்? வடக்குக்கிழக்கில் செய்யப்பட வேண்டியவை ஏராளம் உள்ளன. உள்கட்டமைப்பும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இவை எல்லாவற்றையும் இந்த அரசாங்கம் எப்படி செய்யப் போகின்றது.?

தனியார் நிறுவனங்களுக்கு சலுகைகள் அளிக்கப்படுவதால் அரச நிறுவனங்கள் மூழ்கும் நிலையில் உள்ளன. இந்த அரசாங்கத்துக்கு குறுகியகால செயற் திட்டங்களே உள்ளன. 1970 களின் தொடக்கத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் இதே மாதிரியான கொள்கையை பின்பற்றியதால் தான் யுத்தம் ஏற்பட்டது.

அரசாங்கத்தின் மொத்த வருவாயில் 15 வீதம் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த நாடு எதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது என்பது தெரியும். மகிந்த அரசாங்கத்தினது கொள்கைகள் மாறாத வரையில் வெளிநாட்டு முதலீடுகள் இங்கு வருவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றார். (ர)

## 'நமது ஈழநாடு' இராணுவத்தினரால் சோதனை

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை யாழ். குடாநாட்டில் இருந்து வெளிவரும் சுயாதீன நாளிதழ்களுள் ஒன்றான 'நமது ஈழநாடு' அலுவலகம் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தினை வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாக கண்டிப்பதாக மேற்படி சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊடக சுதந்திரத்தையும் தமிழ் மக்களது தகவல் அறியும் சுதந்திரத்தையும் முடக்கிவிட கங்கணம் கட்டி நிற்கும் ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் தமிழ் ஊடகவியலாளர்களை கொன்றும் ஊடக அலுவலகங்களைத் தாக்கியும் அச்சுறுத்தியும் வருகின்றன.

இதன் ஓர் அங்கமாகவே நமது ஈழநாடு அலுவலகம் மீதான சுற்றி வளைப்புத் தேடுதலை நாம் கருதுகின்றோம். தமிழ் ஊடக சுதந்திரத்தை காக்குமாறு நாம் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்ற போதும் அது ஆட்சியாளர்களது காதுகளில் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே இருக்கின்றது.

இந்நிலையில் குடாநாட்டினில் மீண்டும் ஏற்பட்டு வரும் அசாதாரண சூழலில் மக்களினதும்ஊடகவியலாளர்களினதும் ஊடக நிறுவனங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் செய்தி சேகரிக்கும் உரிமையையும் பேண வேண்டியாகின்றது.

இவ்வாறானதோர் சூழலில் சர்வதேச ஊடக சமூகத்தினதும் எம் மக்களினதும் ஆதரவை வேண்டி நிற்பதுடன் இனப்பிரச்சினைகளை சர்வதேச மட்டத்தில் தொடர்ந்தும் எடுத்துச் செல்ல நாம் உறுதிபூண்டுள்ளோம் என்பதையும் அறியத் தருகின்றோம் என அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஜே.வி.பியின் குற்றச்சாட்டை ஜனாதிபதி நிராகரிப்பு

(கொழும்பு)

அமைச்சர் ஒருவர் 14 மில்லியன் ரூபா மதிப்பில் சொகுசு வாகனம் வாங்கி உள்ளதாக ஜே.வி.பி தெரிவித்திருந்த குற்றச்சாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில்;

அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு வாகனங்கள் வாங்கும் போது கொள்கை முடிவுகளைக் கடைப்பிடிக்கு மாறு திறைசேரிக்கு அறிவுறுத்தல்விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் பேசிய ஜே.வி.பி உறுப்பினர் நந்தன குணதிலக்க உத்தியோகபூர்வ வாகனம் வாங்க அமைச்சர் ஒருவருக்கு 14 மில்லியனை திறைசேரி ஒதுக்கியிருந்தது என்று சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ர)

## பயிலுநர் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு தேசிய கொள்கை

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

பயிலுநர் பட்டதாரிகளுக்கு நிரந்த நியமனம் வழங்குவதற்கான தேசியக் கொள்கை ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது வரை இவ்வாறானதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால் அடிக்கடி பல பிரச்சினைகள் ஏற்பட்டதாக சங்கத்தின் பிரதான செயலாளர் சந்தன சூரியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இதே வேளை பட்டம் பெற்று பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறிய ஏனைய பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பல தரப்பட்ட திகதிகளில் வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் ஒரே திகதிக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-9)

## உதவிப் பதிவாளர் செயலகம் செயற்படத்தொடங்கியுள்ளது

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள உதவி பதிவாளர் செயலகம் நேற்று முன்தினம் முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் பிறப்பு இறப்புத் தொடர்பான 50 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி, வரணி, கச்சாய், எழுதுமட்டுவாழ்,நாவற்குழி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு வசதியாக இவ்வலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வாரத்தில் 5 நாள்களும் இவ்வலுவலகத்தில்பிறப்பு, இறப்புத் தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவு இலக்கம் தெரிந்த விண்ணப்பங்களுக்கு கட்டணமாக 25 ரூபா அறவிடப்படும். பதிவிலக்கம் தெரியாத விண்ணப்பங்களுக்கு 50 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

இது வரை காலமும் இச் செயற்பாடுகளுக்காக கச்சேரி செயலகத்துக்கு போய் வந்த எமக்கு இவ்வலுவலகம் தென்மராட்சியில் அமைக்கப்பட்டமை ஓர் வரப்பிரசாதம் என மக்கள் தெரிவித்துள்ளனர். (த-108)

## உள்ளூராட்சி மன்ற அபிவிருத்திக்கு கனடா நிதியுதவி வழங்கியுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கனடா அரசாங்கம் 988 மில்லியன் ரூபாவை நிதி உதவியாக இலங்கைக்கு வழங்கியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந் நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த நிதியை வழங்குவதற்கான கைச்சாத்திடும் வைபவம் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை செயலாளரும் இலங்கைக்கான கனடா தூதுவராலயத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிதியின் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (த-9)

## சட்டவிரோத மின்சாரம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி மீசாலைப் பகுதியில் அண்மைக்காலமாக சட்டவிரோத மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மின்சாரத்தின் வலு குறைவாகக் காணப்படுகின்றது. எனவே உரிய அதிகாரிகள் விரைந்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-37)

## தொழில்சார் பிரச்சினைகள் இனங்காணப்படும்

(கொழும்பு)

ஆசிரியர் சேவையில் இடம் பெற்று வரும் தொழில்சார் பிரச்சினைகளை இனங்காண்பதற்கான விசேட திட்டம் ஒன்றை கல்வியமைச்சர் சுசில்பிரேம ஜயந்த ஆரம்பித்துள்ளார்.

கல்வித்துறையில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களையும் தனித்தனியாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே தொழிற்சங்கங்களுடன் கல்வியமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஆசிரியர்களின் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக நிலையான தீர்வு காண்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-9)

## சர்வதேச வர்த்தக கண்காட்சி

(கொழும்பு)

'இனஸ்குறே 2006' என்ற சர்வதேச வர்த்தக கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இதன் மூலம் உள்ளூர் வர்த்தக சமூகத்தினரும் வெளிநாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்களும் சந்தித்து முதலீடு மற்றும் வர்த்தக அபிவிருத்தி சம்பந் தமான பேச்சுக்களை நடத்த முடியும்.

கண்காட்சியில் உள்ளூர் மற்றும் உலக நாடுகளின் உற்பத்தி பொருள்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் உள்ளூர் மற்றும் சர்வதேசபுதிய பங்காளிகள் தங்களுக்கிடையில் சந்திப்புக்களை மேற்கொள்ளமுடியும்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் இதனை ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-7)

## உல்லாச பிரயாண சபையின் சுற்றுலா நடமாடும் சேவை

(கொழும்பு)

கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் உள்ள சுற்றுலா நிறுவனங்கள் 2006 ஆண்டிற்கான அனுமதிப் பத்திரங்களை இலங்கையில் பெற்றுக் கொள்ள உதவும் வகையில் இலங்கை உல்லாச பிரயாண சபை சுற்றுலா நடமாடும் சேவை ஒன்றை ஒழுங்கு படுத்தியுள்ளது.

இந்த நடமாடும் சேவை கண்டி குயின்ஸ்ஹோட்டலில்நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இடம் பெறும்.

2002 ஆம் ஆண்டிற்கான தங்களது அனுமதிப் பத்திரங்களை இதுவரை புதுப்பிக்காத சுற்றுலா நிறுவன உரிமையாளர்கள் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடைபெறும் நடமாடும் சேவை மூலம் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். (த-7)

# புலிகள்-படையினருக்கு இடையில் நேரடி மோதல் இல்லை பலஸ்தீனத்திலுள்ளது போல் மக்களூடாக தாக்குதல்கள்

## இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசின் கடிதத்திற்கு அனுப்பிய பதில் கடிதத்தில் ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக கட்சியும் ஒருவரையொருவர் கடுமையாக விமர்சனம் செய்து கடிதப் போர் நடத்தி வருகின்றன.

இனப் பிரச்சினைக்கான அமைதிப பேச்சுக்கள் முடங்கிய நிலையில் மீண்டும் அதை தொடர உங்கள் ஆட்சிக்காலததில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விககிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் மைததிரிபால சிறிசேன கேள்வி எழுபபியுள்ளார்.

இது தொடர்பில் ரணிலுக்கு மைத்திரிபால சிறிசேன எழுதியுள்ள கடிதத்தில் தேர்தல் பரப்புரைகளின் போது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய அணுகுமுறை கையாளப்படும் என்று மஹிந்த ராஜபக்ஷ தெளிவாகத் தெரிவித்திருந்தார். உங்கள் ஆட்சிக்காலத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தான் உருவாக கப்பட்டது. அதற்கடுத்த எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

உங்கள் ஆட்சிக்காலததில் தான் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் முடங்கின. அதை உங்கள் அரசாங்கம் மீள முன்னெடுக்க எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதனால் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்ந்தன. முன்பு பிரதமராக இருந்த போதும் இப்போது எதிர்க கட்சித்தலைவராக இருக்கின்ற போதும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கண்டிக்காமல மறைமுகமாக நியாயப் படுத்தியே வந்தீர்கள்.

தேசிய மற்றும் சர்வதேச அளவில் முஸ்லிம்களையும் அமைதிப்பேச்சுக்களில் இணைத்துக் கொள்ள வலியுறுத்தப்பட்ட போதும் அதைப் புறக்கணித்தீர்கள் இந்தச் செயற்பாடுகளால் தான் அமைதிப் பேச்சுக்கள் முடங்கின. அரசியல் தலைவாகளின் படுகொலைகள் நடந்தன. நாட்டில் அமைதியோ யுத்தமோ ஏற்படாது. அதே நேரத்தில் வடுதலைப்புலிகள் தொடர்ந்து யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலில் ஈடுபடும் நிலை ஏற்படும்.

அமைதிப் பேச்சுக்களைத் தொடங்க மஹிந்த ராஜபக்ஷ புதிய அணுகுமுறையைக் கையாள உள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகள், அனுசரணையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகியோரது நிலைப்பாடுகள், ப்லதரப்பு பங்கேற்கும் பேச்சுககள் என புதிய அணுகு முறையை மஹிந்த கையாளுகிறார். தேர்தல பரப்புரைகளின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருடனும் பேச்சுக்களை நடாத்தப்போவதாக தெரிவித்திருந்தீர்கள.

நாடாளுமன்றில் கொள்கைப் பிரகடனம் தாக்கல் செய்த போதும், வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போதும் எதிர்க்கட்சிகளினது ஒத்துழைப்பை மஹிந்த ராஜபக்ஷ கோரி வருகிறார். மல்வத்தை மகாநாயக்கா உள்ளிடட மதத் தலைவர்களும் எதிரக கடசிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். இப்போது தென்னிலங்கைக் கட்சிகளுடன் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாக ஆராய மஹிந்த ராஜபக்ஷ தயாராக உள்ளார்.

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் அமைதி முயற்சிகளுக்கு நாட்டின் பொறுபபுள்ள எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் கடிதத்துக்கு ஐக்கிய தேசியச் கட்சியின் பிரதிப் பொதுச் [illegible]ய லாளர் திஸ்ஸ அத்த[illegible]யக்க பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

கடந்த நவம்பர் 26ஆம் திகதியன்று மாவீரர் நாள் உரையாற்றிய பிரபாகரன் தமிழ் இனத்தினது மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு ரணில் அரசாங்கம் தர்வுகாணவில்லை என்றும் சர்வதேச சதிவலையில்தான் சிகக வைக்க முயற்சித்தது என்றும் கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து ரணல் மிகவும் ஆபத்தானவர் எனறு அன்ரன் பாலசிங்கமும் தெரிவித்திருந்தார்.

கடந்த டிசம்பர் 11ஆம் திகதி கா.வே.பாலகுமாரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் மக்கள் பாடம புகட்டியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியையுமஅதன் தலைமையையும் விமர்சித்துள்ளது.

இனப்பிரச்சினையில் எமது கட்சியில் எமது கட்சியின் நிலைப்பாடு தெளிவானது. ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு இறுதியான நிரந்தரத் தீர்வுகாணபது என்பதுதான் எமது நிலைப்பாடு. இந்தியாவும் இதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் இந்தியப் பயணக் கூட்டறிக்கையில் இது தெரிவிக கப்பட்டுள்ளது. சர்வதேச சமூகமும, இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களும் இதே நிலைபபாட்டையே கொண்டுள்ளனர்.

ஆனால் மஹிந்த சிந்தனையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினது தேர்தல் அறிககையும் முரண்பாடாக உள்ளன.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்காக கண்ணீர் வடித்து, ஐக்கிய இலங்கைக் கோட்பாடு, நோர்வே அனுசரணையை நிராகரித்துள்ளீர்கள். விடுதலைப்புலிகளும் மஹிந்த சந்தனையைப் பின்பற்றி ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டை நிராகரித்துள்ளார்கள். அதனால் அமைதிப் பேச்சுக்களில் புதிய சிக்கல் எழுந்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும படையினருக்கும் இடையே நேரடி மோதல் நடைபெறாத நிலையில் பலஸ்தீனத்தில் நடைபெறுவது போல் மக்களூடாக இந்தத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த அபாயத்தை ஐக்கிய தேசியக் கட்சி பல சந்தப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளது. வட பகுதி படுகொலைகளை எமது தலைவர் ரணில் கண்டனம் செய்துள்ளார். இந்தக் கண்டனங்களால் எதுவித பயனும் இல்லை என்றும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதே முக்கியம் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

நாட்டினது நிலையற்ற அரசியல்தன்மைக்கு ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும்தான் காரணம். இனப்பிரச்சினை விடயத்தில் உங்களது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்துங்கள். ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமயவினது நிலைப்பாட்டை நாடு அறியும.

கடந்த 13ஆம் திகதி அமைதி முயற்சிகள் தொடர்பாக பேசசுக்கு வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சிககு கடிதம் அனுப்பினார். ஆனால் அன்று பிற்பகலே ஐக்கிய் தேசியக் கட்சிக்கும அதன் தலைமைக்கும் எதிராக ஊடகங்களுக்கு அறிக்கை அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதற்காக ஏன் டிசம்பர் 13 ஆம் திகதிவரை மைத்திரிபால சிறிசேன காத்திருக்க வேண்டும்? ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மஹிநத ராஜபக்ஷக்கும் இடையேயான அமைதி முயற்சிகள் தொடர்பான பேச்சுகளைச் சீா குலைக்கவே மைத்திரிபால சிறிசேன இப்படிச் செயற்படுகிறார் என்று திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார். (ற)

# இலங்கை அரசின் கபடத்தனங்களுக்கு உதவ இந்தியா முன்வரக்கூடாது

## யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை இந்தியப் பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

ஆண்டாண்டு காலமாக எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த எமது மண்ணை இந்திய உபகண்டத்தின் உதவியுடன் நிரந்தரமாக சுவீகரிக்கும் இலங்கை அரசின் கபடத்தனத்தை கண்டிப்பதோடு எந்த வகையிலும் இதை அனுமதியோம் என இந்திய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் தெரிவுபடுத்த முனைகினறோம் எனத் தெரிவித்து யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையினா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அம் மகஜரில் மேலும் யாழ். குடாநாட்டின் வடக்குப் புறமாக அமைந்திருக்கும் வலி வடக்குப் பிரதேசமானது வளம் நிறைந்த மண்ணையும், அள்ளிக்கொடுக்கும் கடல் வளத்தையும் ஒருங்கே கொண்டமைந்த பிரதேசமாகும்.

எமது தாயகப் பிரதேசத்தை அபகரிக்கும் நோக்கில் ஆரம்ப காலத்தில் ஓர் இராணுவ முகாமையும் விமானத்தளத்தையும் ஸ்ரீலஙகா அரசு ஏற்படுத்தி காலப் போக்கில் அதனை விஸ்தரிக்கும் நோக்குடன் பூர்வீகமாக வாழ்ந்த எமது மக்களை உறவுகளை விரட்டியடித்து அகதிகளாககியது. இன்று 15வருடங்களுக்கு மேலாக அப்பிரதேச மக்கள் அகதிகளாக அகதிமுகாம்களில் அல்லலுறும வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 50,000ற்கு மேற்பட்ட மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை இழந்து இன்று நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

கடநத 4 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடனபடிக்கையில் மக்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்திருக கும் இராணுவமானது அவ்விடங்களை விட்டு விலக வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவவுடன்படிக்கையின்படி எந்தவொரு நிலப்பகுதியும் இராணுவத்தால் கையளிக்கப்படவில்லை என்பதோடு அம்மக்கள் இன்றும் கூட அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 4 வருட சமாதானம் என்பது இம்மக்களின் வாழ்வில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாத நிலையில் சமாதான செயற்பாடென்பது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துகின்றது.

இந்த சூழ்நிலையில் இலங்கை இன்பிரச்சினைக்கு சமாதான வழியிலேயே தீர்வு எனக்கூறி ஆட்சிப்பீடம் ஏறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று யுத்தத்திற்கான ஆயத்த நடவடிக்கை மேற்கொள்வது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையளிக்கின்றது.

ஏற்கனவே எமது மக்களின வாழ்விடங்களை முற்றுகையிட்டு அபகரித்து அமைத்திருக்கும் ஆக்கிரமிப்புப் படைகளின் விமானத்தள விஸ்தரிப்பு என்பது மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பித்து எமது மக்களை கொன்றொழிக்கும் செயற்பாடாக நாம் கருத வேண்டியுள்ளது.

விமானத்தளத்தை மேலும் விஸ்தரித்து எமது மக்களின் பூாவீக இடத்தை அபகரிப்பதன் மூலம் எமது மக்கள் நிரந்தரமாகவே அகதிமுகாம்களில் வாழ்வதற்கான நிலையினையே இந்த ஸ்ரீலங்கா அரசானது மேற்கொள்கின்றது.

ஸ்ரீலங்கா அரசின் கபடத்தனமான செயற்பாட்டிற்கு இந்திய அரசானது கைகொடுத்துதவ முன்வந்திருப்பது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கின்றது.

இந்திய மக்களுடன் கலாசார ரீதியாக, ப்ண்பாட்டு ரீதியாக, மொழி, இன, மத ரீதியாக தொடர்புபடடு இரத்த உறவுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மை மீண்டுமொருமுறை மோத விட்டுப் பிரிப்பதறகு தென்னிலங்கைத் தலைமை நரித்தனமான வேலையில் ஈடுபட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் விமான நிலைய விஸ்தரிப்பு பின்னர் அவ்விமானத்தளத்தைப் பாதுகாக்க பராமரிக்க இந்தியப் படைகளை வரவழைத்தல் என இந்தச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை ஆரம்பித்து இந்தியப் படைகளுடன் விடுதலைப்புலிகளை மோத விட்டு எமதுதேச விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் ஓர் நீண்ட நோக்கிலேயே இலங்கையரசின் கபடத்தனமான செயற்பாடு அமைகின்றது.

80 களின் பிறபகுதியில் அவ்வாறானதோர் செயற்பாட்டினையே இலங்கையரசானது மேற்கொண்டு இந்தியப் படைகளை வரவழைத்து விடுதலைப்புலிகளுடன் மோத விட்டு எமது மக்களைக் கொன்றொழித்து எமது தேசியத்தை அழித்தொழிக்கும் செயற்பாட்டினை மேறகொண்டது. அனறைய இலங்கையரசின் கபடத்தனமான செயற்பாட்டில் ஏமாந்து இரத்த உறவுகளாக வாழ்ந்த எம்மை எதிரியாகப் பார்க்க இந்தியா முற்பட்டது. எமது தேசவிடுதலை என்பது இநதிய ஐக்கியத்திற்கு ஆபத்து என்ற பிழையான எண்ணத்தை வளர்த்துக்கொண்டது. அன்றிலிருந்து இன்றுவரை எமமை ஓர் எதிரியாகப்பார்க்கும் இந்திய அரசானது மீண்டுமொரு முறை இலங்கையரசின் கபட நாடகத்தில் சிக்கி எமக்கெதிரான நிலைப்பாட்டை எடுக்க முற்படுவது எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது.

எம் மக்களின் கவலையை இந்திய அரசிற்கும் இந்திய மககளுக்கும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்திய மக்களுடன் கலாசார, பண்பாடடு, இன, மத, மொழி ரீதியாக உறவுகளாக வாழ்ந்து வரும் ஈழததமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துடைக்க இந்திய அரசும் இந்திய மக்களும் முன்வரவேண்டும். இந்திய அரசானது தனது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்து எமது தேச விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து எமது தேசம் விடுதலை பெற அரசியல் இராஜதந்திர ரீதியாக எமக்கு உதவ வேண்டும். இது இந்திய அரசின் உதவி மட்டுமன்று இந்திய அரசின் கடமையாகவும் கருதுகின்றோம்.

இலங்கையரசின் எந்த வகையான கபடத்தனமான சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இந்திய அரசானது உதவ முன்வரககூடாது எனக்கேட்டுக்கொள்வதோடு தற்போது அரங்கேற இருக்கும் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு எந்த வகையிலும் உதவக்கூடாது எனக் கேட்டுக்கொள்வதோடு அதனைத் தடுக்க முன்வரவேண்டுமென இந்திய அரசை தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## இன்று ஒரு தகவல்

# படித்ததும் படிக்காததும்

காசியில் ஒரு பண்டிதர் இருந்தார். நிறையப் படித்தவர். அதனால்தான் பண்டிதர். அவர் ஒருநாள் ஏதோ ஒரு ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். வழியில் மழை பிடித்துக் கொண்டது. "சரி மழை நிற்கும் வரை பக்கத்தில் எங்காவது ஒதுங்கி இருந்து விட்டுப் புறப்படுவோம்" என்று நினைத்தார். அங்கே ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்து விட்டார்.

அந்த வீட்டு மாடியில் ஒரு விபச்சாரி குடியிருந்தார். அந்த சமயத்தில் தெருவில் சிலர் ஒரு பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்தவுடன் அந்த அம்மா தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு சிறுமியைக் கூப்பிட்டார். "இதோ பாரம்மா...இறந்து போனவர் எங்கே சொர்க்கத்திற்கா... நரகத்திற்கா போகிறார் என்று விசாரித்துக் கொண்டு வா" என்று சொன்னார். உடனே 'சரி' என்று சொல்லிவிட்டு அந்த சிறுமி வெளியே ஓடினாள். கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்தாள். 'அவர் சொர்க்கத்திற்குப் போகிறார்' என்று கூறினாள்.

கொஞ்சநேரம் ஆனது. மழை ஓயவில்லை... பண்டிதர் இன்னமும் அந்தத் திண்ணையில் தான் உட்கார்ந்திருக்கிறார். இந்த சமயத்தில் இன்னொரு பிரேதத்தை சிலர் தூக்கிக் கொண்டு அந்த வழியாகப் போனார்கள். மாடியில் இருந்த அந்தப் பெண் மீண்டும் அந்தச் சிறுமியைக் கூப்பிட்டார். "இதோ பாரம்மா... இப்போது தூக்கிக் கொண்டு போகிறார்களே... இவர் எங்கே போகிறார் என்பதையும் விசாரித்துக் கொண்டு வா" என்றார். அந்தச் சிறுமி மீண்டும் வெளியே ஓடிப்போய் விட்டுத் திரும்பி வந்தாள். "இவர் நரகத்திற்குப் போகிறார்" என்று கூறினார்.

இவ்வளவையும் அந்தப் பண்டிதர் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒரே ஆச்சரியம் குழப்பம். யோசித்துப் பார்த்தார். "நானும் எவ்வளவோ சாஸ்திரங்களெல்லாம் படித்திருக்கிறேன். இருந்தாலும் ஒருவன் இறந்த பின்பு எங்கே போகிறான் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியவில்லையே. ஆனால் இந்தச் சிறுமி... எங்கேயோ ஓடினாள்... திரும்பி வந்து எங்கே போகிறார் என்பதை விபரமாகச் சொல்கிறாள் அது எப்படி?" என்று யோசிக்கிறார். ஒன்றும் புரியவில்லை. "சரி... நேரிலேயே கேட்டு விடுவோம் என முடிவு செய்துகொண்டு மாடிக்குச் சென்றார்.

அந்தப் பெண் அவரை வரவேற்று "என்ன வேண்டும்?" என்று கேட்டாள். "ஒருவர் சொர்க்கத்திற்குப் போகிறாரா... நரகத்திற்குப் போகிறாரா? என்பதை எப்படிக் கண்டுபிடித்தாள்?" என்று கேடடார். உடனே அந்தச் சிறுமியே அவர் முன்பு வந்து நின்று விபரம் சொல்ல ஆரம்பித்தாள். "முதலில் ஒருவரை தூக்கிக் கொண்டு போனார்களே அவர் வாழ்ந்த இடம் எதுவென்று விசாரித்துக் கொண்டு போனேன்.அங்கே எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். மகராசன் போய்விட்டாரே... எவ்வளவோ நலல காரியம் செய்தார். தான தருமங்கள் செய்தார். அடுத்தவர்களுக்கு உதவியாக இருந்தார். அவர் போய்விட்டாரே என்று சொல்லி அழுதுகொண்ருந்தார்கள். அதனால் அவர் சொர்க்கத்திற்குப் போகிறார் என்று முடிவு செய்தேன்.

இரண்டாவதாக ஒருவரின் உடலைத் தூக்கிக் கொண்டு போனார்களே...அவர் வீட்டையும் தேடிக் கொண்டு போனேன். அங்கே எல்லோரும் சந்தோசமாக இருந்தார்கள். அயோக்கியன தொலைந்தான். எவ்வளவு அக்கிரமம் செய்து கொண்டிருந்தான். இனிமேல் நமக்குக் கவலை இல்லை என்று சொல்லி எல்லோரும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதனால் அவர் நரகத்திற்குப் போகிறான் என்று முடிவு செய்தேன்" என்றாள் அந்தச் சிறுமி.

இதைக் கேட்டதற்குப் பின்பு தான் அந்தப் பண்டிதருக்கு தான் படித்த ஒரு விடயம் நினைவுக்கு வந்ததாம். அதாவது நல்ல காரியங்கள் செய்பவர்கள் நல்ல கதி அடைகிறார்கள். கெட்ட காரியங்கள் செய்பவர்கள் கெட்ட கதி அடைகிறார்கள்" என்று அவர் சாஸ்திரத்தில் படித்திருப்பது நினைவுக்கு வந்ததாம்.

எவ்வளவு படித்து என்ன பிரயோசனம்? படித்தது நினைவுக்கு வருவதற்கே ஒரு சிறுமியின் உதவி தேவைப்படும் படி ஆகிவிட்டதே.

நரகத்திற்குப் போய்ச் சேர்ந்த ஒரு ஆள் தன் பக்கத்திலிருந்த இன்னொருவனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"நான் இறந்து போனபோது கூட எங்கள் ஊரில் பலர் கூடி நின்று அழுதார்கள். இருந்தாலும் கூட நான் சொர்க்கத்திற்குப் போகவில்லை... நரகத்திற்கு வந்து விட்டேன்" என்றான் அவன். "அது எப்படி?" என்று கேட்டான் பக்கத்திலிருந்த ஆள். "அழுதவர்கள் அத்தனை பேரும் எனக்குக் கடன் கொடுத்தவர்கள்" என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் பிரசெல்ஸில் 19 ஆம் திகதி நடைபெறும்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்ஸில் நடைபெறவுள்ளது.

இநதக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியம் நோர்வே, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்கவுள்ளன. இலங்கையில் முடங்கிக் கிடக்கும் பேச்சுக்களை மீளத் தொடங்குவது பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் படக் கூடும் என்று தெரிய வருகிறது.

இதனிடையே, கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒனறியப் பிரதிநிதி ஜூலியன் வில்சன் தலைமையிலான குழுவினரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்துப் பேசியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களது பாதுகாபபுக் குறித்த கவலையை ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் தாம் தெரிவித்ததாகவும் பிரசெல்ஸில் நடைபெறவுள்ள இணைத் தலைமை நாடுகள் கூடடத்தில் இது தொடர்பில் விவாதிக்கபடவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் உறுதி அளித்துள்ளதாகவும் ஹக்கீம் இச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் தமிழ்,முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் படுகொலைகளை அமைச்சர்கள் சிலர் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினர் மூலமாக நடத்துவதாகக் கூறப்படுவதை மறுத்த ஹக்கீம், அந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பது கடினம் என்றும்,தமிழீழ விடுதலைபபுலிகளும் ஸ்ரீலங்கா அரசாங்கமும் தான் முஸ்லிம்களின பாதுகாப்புக்குப் பொறுப்பு என்றும் கூறினார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினது செயற்பாடுகளைச் சட்டபூர்வமான நடவடிக்கைகளாக மேற்கொள்கின்ற வகையில் வலுப்படுத்த வேண்டும் என்றும் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார். (ற)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரப் பிரிவினரால் எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் கல்வயல் கிராம அலுவலர் பிரிவு ஜே/305இல் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்க்கெதிரான தடுப்பூசி மருந்து ஏற்றப் படவுள்ளதுடன் வளர்ப்பு நாய்களுக்கான பதிவு மேற்கொள்ளப்பட்டு பதிவு அட்டைகளும் வழங்கப்படவுள்ளன.

இதறகு வரும் போது தடுப்பூசி அட்டை,பதிவு அட்டை எனபவற்றுக்கு கட்டணமாக ஒரு குடும்பத்திற்கு ரூ.11.50ஐ கொண்டுவரும்படியும் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

20.12.2005இல் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு,
மருதடிப்பிள்ளையார் கோவிலடி (காலை9.00- 9.30)
1ஆம் கட்டை துர்க்கா மில்லடி (காலை 9.30-10.00)
கல்வயல் சண்முகானந்த பாடசாலை (காலை 10.00-10.30)
துர்ககா பல்பொருள் வாணிப கடையடி (காலை 10.30-11.00)
21.12.2005இல் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு,
வேதவனப்பிள்ளையார் கோவிலடி (காலை 9.00-10.00)
பெருங்குளம் பிள்ளையாா கோவிலடி (காலை 10.00-11.00)
கெருடாவில் பாடசாலையடி (காலை 11.00-12.00).(ற-29)

# மன்னாரில் தீவிர தேடுதல்— இரு தமிழ் இளைஞர்கள் கைது

மனனாரில் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் நடத்திய தீவிர தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் முதல் 3 மணித்தியாலங்களுக்கு மேலாக சந்தைப் பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அனைத்து வாகனங்களையும் தடுத்து நிறுத்தி சோதனையிட்டு ஓட்டுநர்களையும் பயணிகளையும் கடும் விசாரணைகளுக்குட்படுத்தினர். இந்த நடவடிக்கையின போது கைதுசெய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பேசாலையில் கடந்த திங்கட்கிழமை இரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் காயமடைந்ததையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படடதாக இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-8)

# நுரைச்சோலை அனல்மின் திட்டம் திட்டமிட்டபடி அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

எத்தரப்பினரின் எதிர்ப்பு முன்வைக்கப்பட்டாலும் நுரைச்சோலை அனல் மின் நிலையப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று மின்சக்திவள பிரதிய மைசசர் மஹிந்தானந்த அழுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் நாள் வாசிப்பின் போது உரையாற்றிய அமைச்சர், சில மக்கட் பிரிவினரின் எதிர்ப்பு இது விடயத்தில் இருந்து வருவதாகவும், கத்தோலிக்க மதகுருமார் மற்றும் ஐ.தே.கட்சியினர் இந்த எதிர்ப்பின் பின்னணியிலிருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஐ.தே.கவினர் என்னதான் கூறினாலும், புத்தளம் மாவட்டத்தின் பல தொகுதிகளில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை கிடைத்துள்ளமை, நுரைச்சோலை மினநிலைய நிர்மாணத்திற்குப் பெறப்பட்டுள்ள ஆதரவு என்பதையே நிருபித்துக் காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுமட்டுமன்றி,எத்தகைய எதிர்ப்புகளையும் பொருட படுத்தாமல் மேல்கொத்மலை நீர்மின் உற்பத்தித் திட்டமும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து இ.தொ.காவிலிருந்து பிரிந்து செல்லத் திட்டமிட்டுள்ளவர்கள் என்று நம்பப் படட எம்.எஸ். செல்லச்சாமி,வீ. புத்திரசிகாமணி, எஸ். ஜெகதீஸ்வரன் ஆகியோர்களில் இருவர் குறித்த செய்திகள் ஆதாரமற்றவை எனத் தெரிவித்துள்ளனர்.

தாம் கட்சிமாறுவது தொடர்பில் எவருடனும் பேச்சுக்கள் வைத்துக்கொள்ளவில்லை என்று புத்திரசிகாமணியும், ஜெகதீஸ்வரனும் தெரிவித்துள்ளனர். (ற-6)

சுனாமியால்

# நிர்க்கதியான சிறுவர்களை பாதுகாக்க நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது பெற்றோரை இழந்த குழந்தைகளை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு சிறுவர் மற்றும் இளைஞர் தொடர்பிலான சட்ட விதிமுறைகளை மீண்டும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி விசேட ஒழுங்குமுறைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் இது வரை அது செயற்படுத்தப்படாமையினால் சுனாமியால் நிர்க்கதியாகியுள்ள சிறுவர்களை வளர்ப்புப் பெற்றோரிடம் ஒப்படைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு ஆணையாளர் டி.எம்.எஸ். அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சுடன் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்து முன்னைய சட்டத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த 550 குழந்தைகள் ஏற்கனவே வளர்ப்புப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும், 500 குழந்தைகள் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும்,முன்னைய சட்டத்தின் பிரகாரம் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த-9)

# கதிர்காமரின் எம்.பி பதவி அழகப்பெருமவுக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பாராளுமன்ற தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு டளஸ் அழகப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டபின் அவரது பாராளுமன்ற தேசியப்பட்டியல் ஆசனம் வெற்றிடமாகக் காணப்பட்டது .

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் சுசில் பிறேம்ஜெயந்த அவரது நியமனம் தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் நியமனம் தொடர்பான வர்த்தகமானி அறிவித் தலை வெளியிடுமாறும தேர்தல் ஆணையாளரிடம் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ச-8)

# கருணாகுழுவுடன் தொடர்பில்லை மைத்திரிபால சிறிசேன மறுப்பு

(கொழும்பு)

கருணா குழுவுடனோ விடுதலைப்புலிகளுடனோ தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கருணா குழுவிலிருந்து தப்பிவந்த விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இருவர் கடந்த செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போது கருணா அமைப்பைச் சேர்ந்த மங்களம் மாஸ்டர் என்பவரை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வெலிக்கந்தையில் சந்தித்ததாகத் தெரிவித்திருந்தனர்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தங்கள் கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக குறைந்தபட்சம் 10ஆயிரம் வாக்குகளையாவது பெற்றுத் தருமாறு மங்களம் மாஸ்டரிடம் கேட்டதாகவும் அமைச்சரின கோரிக்கையை நிறைவு செய்வற்காக கருணா குழு துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு மக்கள் மததியில் விநியோகித்ததாகவும் சரணடைந்த உறுப்பினர் சாமிநாதன் அருள்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து வெளிநாட்டு ஊடகமொன்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, யாரந்த மங்களம் மாஸ்டர் என அவர் திருப்பிக் கேட்டுள்ளார்.

கருணா குழுவுடனோ விடுதலைப் புலிகளுடனோ தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லையென்றும் இப்படியான தகவல்களை வெளியிட்ட உள்நாட்டு வாராந்த பத்திரிகைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார். (ச)

# கூட்டணிக் கட்சிகளின் சந்திப்பு 2 மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும்

ஜனாதிபதி தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்த கட்சித் தவைர்களுடனான சந்திப்புகளை இரு மாதங்களுக்கு ஒருமுறை நடத்துவதற்குத் தீர்மானிக்கபபட்டுள்ளது.

மஹிந்தவின் தலைமையில அலரி மாளிகையில் நடைபெற்றக் கட்சித் தவைர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 28 கட்சித்தலைவர்கள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். தற்போதைய பாதுகாபபு நிலவரம் மற்றும் சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் ஆகியன குறித்து கட்சித் தலைவர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ விளக்கியுள்ளார்.

தேர்தலின் போது தனது வெறறிக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் இந்தக் கூட்டத்தின் போது மஹிந்த நன்றி தெரிவித்தார். (ச)

# மின் கட்டணம் தொடர்பில் 2006இல் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த ஆண்டிலிருந்து மின்சாரக கடடணத்தை உரிய காலததில் செலுத்தாத அரசாங்க நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனறு மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்தின இது தொடர்பான பணிப்புரையை விடுத்துள்ளார். அமைச்சின் பேச்சாளர் ஒருவர் அமைச்சு தற்சமயம் 8 ஆயிரம் கோடி ரூபா கடன் பழுவை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை உரிய முறையில் செலுத்தாத அரசாங்க நிறுவனங்களில் ஆஸ்பத்திரிகள், ஆயுதப்படைகள் ஆகியவற்றுடன் இணைந்த நிறுவனங்கள் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசாங்க நிறுவனங்கள் பல பெருந்தொகையான மின்சாரக் கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளன.

அதேசமயம், மின்சார விநியோகததில இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்கும் முகமாக மன்சாரசபைச் சட்டத்தில் திருததங்கள் கொண்டுவரப்பட வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

## இராணுவ ரக் விபத்து

வெலிகந்த போவத்துப் பிரதேசத்தில் இராணுவ ரக் வண்டியொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் 9 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனா.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்த இராணுவ வீர்கள் பொலநறுவை மற்றும வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பரிவு தெரிவித்துள்ளது. வெலிகந்தப் பிரதேசததில் பயிறசிகளுக்குச் சென்றுவிடடு முகாமுக்கு திரும்பிக் கொணடிருநத இராணுவ வீரர்கள் சென்ற வாகனம இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (ற-9)

# வாழ்க்கை வளம்பெற வாழ்

**கரவை கிழக்கு**
**க.சி.சண்முகம்**
ஓய்வுபெற்ற அதிபர்

திருமகள் செல்வத்திற்கு அதிபதி-திருமகள் உளத்தூய்மை உள்ளவர்களின் இல்லங்களில் பொலிந்து விளங்கி வீற்றிருந்து சகல செல்வங்களையும் அவர்



களுக்கு வழங்குவார். ஆனால் பொறாமை உள்ளவர்களின் இல்லங்களை அவர் திரும்பிககூடப் பா்க்கமாட்டார். ஒருசில சமயங்களில் தனக்கு மூத்தவளான மூதேவிக்கும் அவ்வில்லங்களைக் காட்டி, அவளை அதில் தங்க வைத்து, அவர்களுக்குத் தீராத வறுமையைக் கொடுத்துத துன்புறச் செ யும் சூழ்நிலையையும் உ டாக்கிக் கொடுப்பாள. எனவே வ ழக்கை வளம்பெறப் பொறாமைகது இடங கொடுத்தல் தகாது. அதனைத் தூரவிலக்கிவைத்தல் வேண்டும்.

"உண்மை உயர் ு தரும்" உண்மை பேசுபவர்களின் இல்லங்களை பேருடனும், புகழுடனும சகல விதமான செல்வச் சிறப்புக்களுடனும் பொலிந்து விளங்கும். எனவே வாழ்க்கை வளம்பெற நாம் எப்போதும் உண்மை பேசுதல் மிகவும் பிரதானமானது.

நலலவர்களின் சொற்களைக் கேட்டு அதன்படி ஒழுகி வருவதும், நல்லவர்களுடைய நல்ல குணங்களை எப்போதும் நினைத்துச் சொல்லி வருவதும், நல்லவர்களுடன் நட்புப்பாராட்டி வருவதும் ஒருவனுக்கு எப்போதும் நன்மைமையே நல்கும் என்று ஒளவைப் பிராட்டியார் நல்லதைக் கண்டதுவும் நன்றே -நலம் மிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே. எனத தாம் பாடியருளிய மூதுரைச் செயயுள ஒன்றில் எடுத்துக் காட்டியுள்ளார்,

'அன்பும் அறனும்' உள்ளவர்களது வாழ்க்கை 'பண்பும் பயனும்' உள்ளதாகப் பாரினில் சிறந்து விளங்கும், ஏனையோருக்கும் அது பயன்கொடுத்துப் பொலிந்து விளங்கும்.

அருள் நிறைந்தவர்களது வாழ்க்கை 'பயன்மரம் உளளூர்ப பழுத்தாற' போல அனைவருக்கும் உபயோகமாகி உறுதுணை புரியும்,

கல்வியும் ஞானமும் பொருந்தி வாழ்ந்து வருபவர்களது வாழ்க்கை 'குன்றின் மேலிட்ட தீபம் போல' யாவருக்கும் ஞான ஒளி நல்கி மினிரும். இதனால் அனைவரும உடல், உள, ஆன்ம சுகம் பெற்று உய்தி பெறுவர்;

சினத்தை அகற்றித் தண்ணளி பொருநதிய நற்குணம் உள்ளவர்களது வாழ்க்கை சாந்தமே பொருந்தவைத்து, அனைவரையும் நல்வழியிற் செலுத்தி உயர்தி பெறவைத்து நிற்கும்,

வளம்பெற்ற வாழ்க்கையில் உண்மை நிலவும், விருந்தோம்பல் நிகழும், பொறுமை இழந்து பூரிப்பு நல்கும், இட்டு உண்டு இருககும் சிறந்த உட்பொருள் பொருந்தி 'அலலற் பிறவி அறுக்க' வழி காட்டி உதவும்.

எனவே வாழ்க்கை வளம் பெற வாழ வகுக்கப்பட்ட சிறந்த நல் வழிகளைப் பின்பற்றி வாழ்ந்தால் வளளுவர் பெருந்தகை கூறியது போன்று,

'வையத்து வாழ்வாங்குவாழ்வான்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்' எனும் நிலையை அடையலாம்

# வெள்ளிநற்சிந்தனை

# திடீர் சோதனைக் குழு அமைப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிவரும் மதுபான தயாரிப்பு நிலையங்கள் மீது திடீர் சோதனைகளை நடத்த 10 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாத்தறைப்பகுதியில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானம் அருந்திய 14போ மரணமடைந்தமையைத் தொடர்ந்து இந்த சோதனை நடவடிக்கைகள் தீவிரவிப்படுத்தப்பட்டுள்ளதாக தென்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (த-9)

# இராசிபலன்

16.12.2005
(மார்கழி 01, வெள்ளிக்கிழமை)
பிரதமை முன்னிரவு 10.40மணிவரை
மிருகசீரிடம் முற்பகல் 11.04 மணிவரை
இராகுகாலம் 10.52-12.22 மணிவரை
சுபநேரம் 6.22-7.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, நல்ல தகவல், தொழில் விருத்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, அச்சமானநிலை. |
| மிதுனம் | வீண்தொல்லை, முயற்சி தடங்கல், வாகன பயம், உடல்வியாதி. |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, எடுத்த கா்ரியம் கைகூடும், பிரயாண நன்மை, போசனசுகம். |
| சிங்கம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், போசன நன்மை, பணவருவாய். |
| கன்னி | காரிய இடை!று, சிறுவியாதி, புதிய விடயம், குடும்பக்கவலை. |
| துலாம் | ரோகநிலை, தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, புதப பொருள் சேர்க்கை, இனிய அனுபவம். |
| தனுசு | தொழில் மந்தநிலை, பணவிரயம், காரிய தாமதம், விவாதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர் கள் உதவி, போசனநன்மை. |
| கும்பம் | அமைதிக்குறைவு, வேலைச்சுமை, பிதா சிந்தை, கோபப்படுதல். |
| மீனம் | தெய்வசிந்தை, பெருமையடைதல், மன மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# படையினரின் அராஜகம் தொடருமாயின் மக்கள்படை தகுந்தபாடம் புகட்டும்

## கோப்பாய் பிரதேச மக்கள் விழிப்புணர்வுக் கழகம்

சிறிலங்கா பேரினவாதமே உனது அடாவடித்தனங்களை உடன் நிறுத்து எனத் தெரிவித்து கோப்பாய் பிரதேச மக்கள் விழிப்புணர்வுக் கழகம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அதில் மேலும்,

வடக்கு-கிழக்கில் அரசபடைகளினால் தொடர்ந்து நடாத்தப்படும், ஒவ்வொரு சம்பவங்களின் செயற்பாடுகளையும் உற்று நோக்கும் போது அவர்கள் சமாதானம் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது பாரிய யுத்தம் ஒன்றை திணிப்பதற்கான முன்னெடுபபுக்களை மேற்கொள்வது வெளிப்படையாக தெரிகின்றது.

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம ஏற்பட்டது முதல் இன்றுவரை சாதித்தது என்ன? நிராயுத பாணிகளான அரசியல் போராளிகள், நாட்டுப்பற்றாளர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலர் மிகக் கொடூரமான முறையில் அரச படைகளினாலும் அவர்களுடன ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் தேச விரோதக குமபல்களினாலும் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களது படுகொலைகள் தொடர்பாக எந்த விதமான விசாரணைகளோ, சட்ட நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை. சிறிலங்கா அரசால் எந்த விதமான கண்டனமும் தெரிவிக்கப்படவில்லை. அரசு வாய் மூடி மௌனியாக இருந்து வருகின்றது.

தற்போது யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் போராட்டத்தின் மூலம் அரச படைகளுக்கு ஏற்படும் இழப்புக்களை கண்டு கொதிப்படைந்த அரசும், அரச படைகளும் தமிழ் மக்களுக்கு எதிரான தங்களது அராஜகங்களை கட்ட விழ்த்து விட்டுள்ளது. என்றுமில்லாத வகையில் இராணுவகுவிப்பு, தேடுதல், சுற்றிவளைப்பு, சித்திரவதை, வீதித்தடைகள் என்பவற்றை ஏற்படுத்தி மக்களை சீண்டி போருக்கு வலிந்து இழுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாமல் கல்விச்செயற்பாடுகளைக குழப்புமுகமாக மாணவர் சமூகத்திற்கெதிரான தமது அடாவடித் தனங்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஆக்கிரமிப்புப் படைகள் வசம் உள்ள பாடசாலைகளிலிருந்து ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேறவில்லை. மாறாக தமது நிலைகளைப் பலப்படுத்தி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தடையாக இருந்து கொண்டு மாணவர்களை வலிந்து போருககு இழுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

மேலும் போருக்கான முன் ஏற்பாடாக அண்மைக் காலங்களில் இந்திய அரசின் இராணுவக் கடற்படைத் தளபதிகளின் வருகை அதிகரித்து வருகிறது. இதன் ஒரு கட்டமாக அண்மையில் சிறிலங்கா கடற்படைக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் இந்தியக் கடற் படையின் பாரிய போர்க் கப்பல்களான சுகன்யா மற்றும் கிர்பான் என்பன சிறிலங்காவை வந்தடைந்துள்ளது. இந் நடவடிக்கைகள் மூலம் சிறிலங்கா அரசு பாரிய போர் ஒன்றை தொடங்கும் முயற்சியில் தன்னை தயார்ப்படுத்துகின்றது என்பது தெட்ட தெளிவாக தெரிகின்றது.

தமிழ் மக்கள் மீதான அரச படைகளின் அடாவடித்தனங்களால் இழப்புக்கள் ஏற்படும்போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத அரசாஙகமும், அரச படைகளும் தமது தரபபில் இழப்புக்கள் ஏற்படுமபோது மட்டும் பாரிய நடவடிக்கைகளை எடுத்து மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்குலைப்பது மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுளளது. சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு நிரநதரமான ஒரு தீர்வைத் தரும் என்பதில் மக்களுக்கு துளிகூட நம்பிக்கையில்லை. இவை கடந்தகால அரசுகள் தமிழ் மக்களுக்கு கற்றுதந்த பாடம்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனா் என்பதை சிங்களப் பேரினவாதம் புரிந்து கொணடிருக்கும். தமிழ்மக்கள் மண்டியிட ஒன்றும் முட்டாள்கள் அல்ல. மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகள், மக்களை அச்சுறுத்துவது, பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் போனறவற்றை பாரிய யுத்தம் ஒன்றை திணிப்பதற்கான அறிகுறியாகவே நாம் கருதுகின்றோம். சிறிலங்கா அரசே! அரசபடைகளே! தங்களின இவ்வாறான செயற்பாடுகளை அரங்கேற்றுவீர்களானால் விளைவுகள் விபரிதமானதாக அமையும் என்பதனையும் எமது விடுதலையை, எமது சுகந்திரத்தை, எமது தாயகத்தை, எமது உரிமையை நாமே வென்றெடுக்கும் புனிதபணியில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும என்பதனையும், தமிழ்மக்களை அடக்கிஒடுக்கி உனது ஆதிக்கத்தை நிலைநாட்டிவிடலாம் என்ற அற்ப ஆசை ஒரு போதும் நிறைவேற மாட்டாது. எனவே உடனடியாக உனது அராஜக நடவடிக்கைகயை நிறுத்த வேண்டும். இல்லையேல் எமது இனத்தின் தற்காப்பு கவசமாக அமைக்கப்பட்டுள்ள மக்கள் படைக் கட்டுமானம் தகுந்த பாடம் புகட்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (த)

# மன்னாரில் புலிகள் க.கா.குழு சந்திப்பு

(மன்னாா)


தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறையினருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. வட்ட கண்டல் சாலைம்பைக் குளத்தில் உள்ள திட்டமிடல செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் கண்காணிப்புக்குழுவின் சார்பில் போர்நிறுத்தக் கண்கணிப்புக்குழுவின் தலைவர் ஹக்கீம் ஹொகலண்ட், மாவட்ட கண்காணிப்புக் குழுத்தலைவர் றொபின்சன் ஆகியோரும் விடுதலைப்புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளா வேங்கை, மாவட்ட சமாதான செயலக இணைப்பாளர் சோசை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இயல்பு வாழ்க்கையில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளமை மற்றும் தற்போது படையினர் மேற்கொள்ளும் தேடுதல் நடவடிக்கைகள் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (ற-8)

# சித்தவைத்தியம் மூலம் 4100குழந்தைகளை உருவாக்கிய சாதனை மருத்துவர்

**மழலைச் செல்வமில்லாமல் மனம் தளர்ந்து போன நிலையில் பல்லாயிரக்கணக்கானோர் உளர். ஆல், அரசு சுற்றியும் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்தும் பற்பல வைத்தியர்களிடம் வைத்தியம் பார்த்தும் மகப்பேற்றுப் பாக்கியம் கிடைக்காமல் மனம் உடைந்த நிலையில் உள்ளோருக்கு ஆறுதல் அளிக்கும் அருமருந்தாகத் திகழ்கிறது இக்கட்டுரை.**





பிள்ளைப் பாக்கியம் கிடைக்காமல போவதற்குப் பல காரணங்கள் உண்டு. பெண்ணிடமும் ஆணிடமும் இக்குறைபாடுகள் உண்டு. இதற்காக ஒருவரையொருவர் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொணடிருக்காமல் 'நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்பபச் செயல்'' என்பதற்கிணங்க தகுதியானவர்களிடம் தகுந்த சிகிச்சை பெற வேண்டும்.

### இயற்கை வைத்திய மூலம் மக்கட் பேறு

ஒரு பெண்ணுக்கு இரண்டு கருக் குழாய்களிலும் அடைப்பு இருந்தால்... அல்லது ஆணுக்கு உயிரணு எண்ணிக்கை பூஜ்யமாக இருந்தால் அந்தத் தம்பதிக்கு இயற்கையாகக் குழந்தை பிறக்கும் வாய்ப்பு இல்லை எனலாம்.

ஆங்கில மருத்துவப்படி பார்த்தால் இவர்களுக்கான தீர்வு 'டெஸ்ட் ரியூப் பேபி' மட்டுமே. ஆனால் இந்த இரு பிரச்சினைகளையும் மூலிகை மருந்துகள் மூலம் நீக்கி இயற்கையாகக் கருத்தரிக்க வைத்து குழந்தை பெறச் செய்திருக்கிறார் மூலிகை மருத்துவர் ஜமுனா. "மருத்துவ உலகின் மிகப் பெரிய அதிசயம் இது'' என அதிசயிக்கிறார் மகப்பேறு மருத்துவர் டாக்டர் சத்யபாமா ரெட்டி. 90 வயதான இவர் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பிரச்சவங்களைப் பார்த்த பழுத்த அனுபவசாலி.

### மூலிகை மருத்துவ மூலம் 4100 குழந்தைகள்

மூலிகை மருத்துவர் ஜமுனா மூலிகை சிகிச்சை மூலமாக இதுவரை 4100 சித்தா குழந்தைகளை உருவாக்கிச் சாதனை படைத்திருக்கிறார். எம்.பி.பி.எஸ், மற்றும் உயர் மருத்துவம் பயின்ற நூற்றுக்கு மேற்பட்ட டாக்டர்களும் கூட இவரிடம் சிகிச்சை பெற்று குழந்தை பெற்றிருக்கிறார்கள்.

கத்தியின்றி இரத்தமின்றி விளைவுகள் எதுவுமின்றி ஆரோக்கியமான கொழுகொழு குழந்தையைப் பெற சித்த மருத்துவத்தில் வழியுண்டு ''உடலை நோகச் செய்கின்ற பரிசோதனைகள் இரத்தத்தை இழக்க வைக்கின்ற அறுவை சிகிச்சைகள், பக்கவிளைவுகளை ஏற்படுத்துக்கின்ற அதி வீரியம மிக்க மருந்துகள் எதுவுமே நான் தருவதில்லை.

மற்றப்படி தம்பதிகளிடம் என்ன குறைபாடு என்பதை அறிய எளிமையான சில பரிசோதனைகள் மட்டும் செய்து வரச் சொல்வேன். ஆண்கள் என்றால் தகுந்த இடைவெளியில் மூன்று முறை 'செமன்' டெஸ்ட் செய்துவர வேண்டும் .விந்தணு குறைபாடு இருக்கிறதா என்பது இந்த எளிய டெஸ்ட்டில் தெரிந்து விடும். அறுவை சிகிச்சை தேவைப்படாது.

பெண்களிடம் கருக்குழாய் அடைப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு எக்ஸ்ரே மற்றும் கருப்பை சினைப்பை பொசிஷனை அறிய 'பெல்லிஸ் ஸ்கான்' எடுத்துவரச் சொல்வேன். இதன்மூலம் அத் தம்பதிகளிடமுள்ள கோளாறு என்ன என்பது தெரிந்து விடும். அதற்கேற்ப அவர்களுக்கான பிரத்தியேக சித்த மருத்துகளை என் கைப்படத் தயாரித்துத் தருகின்றேன். பத்தியம் கடைப்பிடித்து இந்த மருந்துகளை ஒழுங்காகச் சாப்பிடும் பட்சத்தில் பலன் நிச்சயம் இந்த மருந்துகள் குழந்தை பிறக்கச் செய்வதற்கானது என்பதுடன் உடலை ஆரோக்கியமாகவும் மாற்றும்' என்கிறார் டாக்டர் ஜமுனா.

### சுஷ்மா சொல்லும் கதை

தாம்பரத்திலுள்ள அவரது 'கார்த்திக் கருவாக்க மருத்துவமனையில் மேடான வயிறும் தாய்மைக் களையுமாக நிறை மாதக் கர்ப்பிணியாக அமர்ந்திருந்த சுஷ்மாவுக்கு இது ஒன்பதாம் மாதம். டாக்டர் ஜமுனாவிடம் சிகிச்சைக்கு வந்த போது சுஷ்மாவுக்கு இரு கருக் குழாய்களிலும் அடைப்பு. மேலும் சினைபபையில் நீர்க்கட்டி வேறு. அவர் கணவருக்கு குறைவான உயிரணு எண்ணிக்கை. இத்தனை பிரச்சினைகளையும் மூலிகை மருந்தின் மூலம் சரி செய்து சுஷ்மாவைக் கருத்தரிக்கச் செய்திருக்கிறார் டாக்டர் ஜமுனா.

'எங்களுக்கு 99இல் கல்யாணமான புதிசுலே ஒருமுறை எனக்கு நாள் தள்ளிப் போச்சு. நாங்கபட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை. ஆனா அறுபதே நாள்தான். கர்ப்பம் இல்லையென்று தெரிந்தது' என்று சொல்ல ஆரம்பித்தார் சுஷ்மா.

"அப்ப நாங்கள் ஜேர்மனியில் இருந்தோம். அங்கே ஓர் ஆஸ்பத்திரியில் டெஸ்ட் பண்ணியபின்தான் தெரிந்தது என் சினைப்பையில் நீர்க்கட்டி இருக்கிற விடயம். அது இருக்கிறவரை குழந்தை பிறப்பது சிரமம். அந்தக் கட்டியை ஆப்ரேஷன் மூலம்தான் நீக்க முடியுமென்று சொன்னாங்க. என் கணவர் பயந்து விட்டார். இயற்கை முறையிலே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய டாக்டர்கள் யாராவது உண்டா என்று இன்டர்நெட்டில் தேடியபோதுதான் டாகடரம்மா பற்றித் தெரிய வந்தது.

2003ஜுலை மாதம் எங்களுக்கு அப்பாயின்ட்மென்ற் கிடைச்சுது. தன் சிகிச்சை முறை பற்றி பொறுமையாக விளக்கினாங்க. பத்திய உணவில் தொடங்கி அன்றாட வாழ்க்கை வரை கட்டுப்பாடாக இருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுதினாங்க. என் கருக்குழாய்களின் பொசிஷன் மற்றும் கணவரின் விந்தணு பற்றிய விபரங்களைத் தெரிங்சுக்க சிம்பிளாய் ஒரு சில டெஸ்ட எடுக்கச் சொன்னாங்க.

அப்போதான் என் இரு கருக்குழாய்களிலும் அடைப்பு இருக்கிற விடயமும் என் கணவரிடம் விந்தணு குறைவாக இருப்பதும் தெரியவந்தது. போதாக் குறைக்கு எனக்கு சினைப்பையில் கட்டி. எல்லாவற்றையும் சரி பண்ணிவிடலாம் என்ற நம்பிக்கையையும் மருந்தோடு சேர்த்துக் கொடுத்தாங்க டாக்டரம்மா. அவர் நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரு சில மாதச் சிகிச்சையிலேயே என் கருக்குழாய் அடைப்பு நீங்கிவிட்டது. அவர் விந்தணு எண்ணிக்கையும் உயர்நது. உடம்பில் ஊளைச்சதைநீக்கி சிககென்று சுறுசுறுப்பாகவும் ஆகிவிட்டேன் குழந்தை வேண்டும்மென்ற எங்கள் கனவும் நனவாச்சு'' என்றார் சுஷ்மா

### கானலை நீரெண எண்ணி...

பத்மாவதி - யுகேந்திரன் தம்பதிகளின் கதை வேறு மாதிரி. 86 இல் திருமணமான இவர்களுக்கு 2000 வரை குழந்தை இல்லை. டெஸ்ட் ரியூப் பேபி உட்பட பல முயற்சிகளையுயம் செய்து பார்த்திருக்கிறார்கள். மூன்று இலட்சம் ரூபாவுக்கு மேலாகச் செலவழித்தும் பலனளிக்காத நிலையில் டாக்டர் ஜமுனாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் வந்திருக்கிறார்கள்.

மூன்று இலட்சம் ரூபாவுக்கு மேலாகச் செலவழிக்கும் பலனளிக்காத நிலையில் டாக்டர் ஜமுனாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் வந்திருக்கிறார்கள்.

அந்தப் பிரபல மருத்துவ மனையில் பணம் தண்ணியாகச் செலவானதுதான்மிச்சம். எங்களிடம் என்ன குறைபாடென்றே சொல்லவில்லை. ஏதோ ஹார்மோன் பிரச்சினை என்றார்கள். வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்தோம். வீரியமாக ஆங்கில மருந்துகளை எக்காச்சக்கமாகச் சாப்பிட நோர்ந்ததால் ஏற்பட்ட உடல் உபாதைகள் ஒரு பக்கம். குழந்தை இல்லையே என்ற ஏக்கம் இன்னொரு பக்கம். நாளாக ஆக வயது ஏறிக்கொணடே போகிறதே என்ற கவலை ஒரு பக்கம். அப்பொழுது தான். இவர்களைப் பற்றித் தெரிய வந்தது. கடைசி முயற்சியாக இவரையும் பாரக்கலாமே என்று வந்தோம். தடிமனான புத்தகம் போல இருந்த எங்கள் மெடிக்கல் ரிப்போட்டை படிச்சு முடித்த டாக்டரம்மா உங்களுக்குச் சிகிச்சை அளிக்கத் தயார். ஆனால் ஆங்கில மருந்துகளை ஏராளமாகச் சாப்பிட்டதால் ஏற்பட்ட பக்கவிளைவுகளை முதலிலே நீக்கவிட்டுத்தான் உங்களுக்கான தனிபபட்ட மருந்துகளைத்தரவேண்டும். அப்பொதுதான் மருந்து வேலை செய்யும் பலன் கிடைக்க இரண்டு வருஷம் கூட ஆகலாம்.

மந்திரத்தால் மாங்காய் பறிப்பது போன்ற விஷயமல்ல இது என்றார். நாங்கள் ஒப்புக் கெண்டோம். டாக்டரம்மா கூறியபடி பத்திய முறைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்தோம். எட்டே மாதத்தில் நான் கருவுற்றேன். அன்றைய தின சந்தோஷத்தை எங்களால் வர்ணிக்கவே முடியாது. எங்களது கண்கண்ட தெய்வம் டாக்டரம்மா தான் என்று சொன்ன பத்மாவதிக்கு இப்பொழுது லட்டு மாதிரி மூன்று வயதில் காவயராணி என்ற பெண குழந்தை.

### புத்திசாலித்தனம் மிக்க குழந்தைகள்

டாக்டர் ஜமுனாவின் மூலிகை மருத்துவம் மூலம் பிறக்கும் குழந்தைகள் அத்தனைக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. பெற்றோரை விட அதிகப்படி நிறம்.சுறுசுறுப்பு. சராசரியை விட புத்திசாலித்தனம் அதிகமாகக் காணப்படுகின்றன. ஓர் உதாரணம் - குமார் சத்தியபாமா தம்பதிகளின் பத்து வயது மகன் பிரதீப். சென்னை ஜவஹர் வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பில் படிக்கிற பிரதீப விளையாட்டிலும் படிப்பிலுமாக வாங்கிக் குவித்த பதக்கங்களுக்குக் கணக்கே யில்லை. இன்னொரு விசேஷம் குமாரின் இரு தம்பிகளான சுகுமார், ராம்குமார் கூட ஜமுனாவிடம் சிகிச்சை பெற்று மூலிகைக் குழந்தைகளைப் பெற்றெடுத் திருக்கிறார்கள்.

'எங்களுக்கு 91இல் திருமணம் அடுததடுத்து இரண்டுமுறை மனைவிக்கு அபாஷன் ஆகிவிட பின் மூன்று வருடங்களுக்கு கர்ப்பமே தரிக்கவில்லை. மகப்பேறறு மருத்துவர்கள் பலரையும் பாாத்தோம். எனக்கு விந்தணு எண்ணிக்கை குறைவாம். அதை அதிகரிப்பதற்காக எக்கச்சக்கமான ஹார்போன் ஊசிகள் போட்டார்கள். உடம்பு பலூன் போல ஊதிவிடடது, அவளுக்கு மாதவிலக்கு ஒழுங்காக வராது என்ற குமார் தொடர்நது கூறினார்.

அப்பொழுதுதான் ஆனந்த விகடன் இத ழில் ஜமுனா டாக்டர் பற்றி கவர் ஸ்டோரி வெளிவந்தது. எனக்காகவே அக்கட்டுரை வெளியாது போல ஓர் உணர்வு.

உடனே டாக்டரிடம் ஓடினோம். சொன்னால் நம்பமாட்டீர்கள். சில மாத சிகிச்சையிலேயே என் மனைவி கர்ப்பமாகிவிட்டாள். பிரசவமும் ரெம்ப சுலபமாக இருந்தது.

ஆரோக்கியமான குழந்தை பிறக்க வேண்டுமென்பதற்காகவே என் தம்பிகளும் இங்கே சிகிச்சைக்காக வந்தார்கள். மொத்தத்தில் எங்கள் குடும்பத்துக்கு விளக்கேற்றியவர் டாக்டர் தான் என்கிறார் நெகிழ்வாக.

### சித்த வைத்தியத்தின் சிறப்பு

குழந்தை வரம் வேண்டி கனடா, மலேசியா, சிங்கப்பூர் என்று பல நாடுகளுக்கும் போய் மருத்துவம் செய்தும் பலனில்லாமல் கடைசியாக டாக்டர் ஜமுனாவிடம் வந்தனர். பிரான்ஸில் இருக்கும் சித்ரா சண்முகம் தம்பதியினர். இப்பொழுது அவர்களுக்கு மனம் கொள்ளாத மகிழ்ச்சி காரணம் சிதரா. இப்பொழுது 5 மாதக் கர்ப்பிணி.

அவரவர் குறைபாட்டின் தன்மைக் கேற்பவும் நான் சொல்லும் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் வகையிலும் தம்பதிகளுக்கும் ரிசல்ட் கிடைக்க சற்று முன்னே பின்னே ஆகலாம். ஒரு சில தம்பதிகள் இரண்டு மூன்று மாத மருத்துவத்திலேயே கருவுறுகிறார்கள். ஒரு சிலருக்கு ரிசல்ட் கிடைக்க சில மாதங்கள் அல்லது ஒரு வருடம் அதற்கு மேலேயும் ஆகலாம். சித்த மருத்துவத்தில் இத்தனை நாட்களுக்குள் உங்களுக்குக் குழந்தை பிறக்க வைக்கிறேன் என்று உத்தரவாதமளிக்க முடியாது.

என்னிடம் சிகிச்சைக்கு வரும் தம்பதியில் ஆணுக்கு உயிரணு அறவே இல்லையென்று தெரியவரும் போது அவரது பிறப்புறுப்பின் தன்மையை விஞ்ஞான ரீதியாக ஆராய ஓர் ஆண் மருத்துவரிடம் பரிசோதனைக்கு அனுப்புவேன். அறுவை சிகிச்சை எதுவும் இல்லாமல் எளிய பரிசோதனை செய்து ரிசல்ட் கொடுப்பார் அவர். அந்த ஆணின் பிறப்புறுப்பு சரியாக அமைந்து, அது செயற்படாமல் இருந்தால் சித்த மருத்துவத்தின் மூலம் சரியாக இயங்க வைக்கலாம. ஆனால் ஐம்பதில் ஒருவருக்கு சரி செய்யவே முடியாத அளவுக்கு கோளாறு தீவிரமாக இருக்க நேரிடும். அவர்களுக்கு நோயின் தன்மையை விளக்கிக் கூறித் திருபபியனுப்பி விடுவேன்.பொய்யான வாக்குறுதிகளை அளிக்க நான் விரும்புவதில்லை.

மேலும் எல்லா மருத்துவ முறையிலுமுள்ள சிறப்பு அம்சங்களைத் திறந்த மனதுடன் ஏற்று நோயாளிக்கு மருத்துவம் செய்வது தான் ஒரு மருத்துவரின் கடமை. அந்த வகையில் அலோப்பதி மருத்துவர்களின் உதவி எனக்கு அவசியம்.

அதேபோல அறுவை சிகிச்சை இல்லாமல் ஆணின் உயிரணுவை அதிகரிக்கவோ பெண்ணின் கருக்குழாய் அடைப்பை நீக்கவோ சித்த மருத்துவத்தால் மட்டுமேமுடியும். இதற்கு என்னிடம் சிகிச்சை பெற்று குழந்தை பெற்ற பல நவீன மருத்துவர்களே சான்று. உடல் நிலை பாதித்துதான் ஒரு குழந்தை தரவேண்டுமென்ற நிலை வந்தால் அத்தகைய மருத்துவததை நான் எக்காலத்திலும் செய்ய மாட்டேன். அதைவிடஅத் தம்பதியரை தத்து எடுத்துக் கொள்ளுமாறு விடுவேன்.

உதவியாளர்களைக் கூட வைத்துக் கொள்ளாமல் ஒவ்வொரு ஜோடியையும் நானே நேரடியாகப் பார்த்து அதற்கான மருந்துகளையும் நானே கைப்படத் தயாரிக்கிறேன். அதனால் மாததது்குப் பாதி நாள் மாத்திரமே ஆலோசனை வைத்துக் கொண்டு மீதி நாட்களில் அவர்களுக்கான மருந்துகளைத் தயாரிக்கிறேன்.

(.....ஆம் பக்கம் பார்க்க)

# அகமதாபாத் அணியிலிருந்து கங்குலி நீக்கம்



இலங்கை அணிக்கெதிராக அகமதாபாத்தில் டிசம்பர் 18ஆம்திகதி தொடங்கும் 3வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியிலிருந்து முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி நீக்கப்பட்டு உள்ளார். கங்குலிக்கு பதிலாக மும்பை வீரர் வாசிம் ஜாபர் தொடக்க ஆட்டக்காரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான தொடர்களுக்கும் ராகுல் திராவிட் தலைவராக நீடிக்கப்பட்டுள்ளர்.

டில்லி டெஸ்டில் முதல் இன்னிங்சில் 40 ஓட்டங்களும் 2வது இன்னிங்சில் 39 ஓட்டங்களும் குவித்த கங்குலி அணியிலிருந்து நீடிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் விளையாடும் அரசியல்தான் கங்குலியின் நீக்கத்திற்கு காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இது குறித்து சபையின் முன்னாள் இணை செயலாளர் குப்தா கூறுகையில் டில்லி டெஸ்டில் முக்கியமான கட்டததில் பொறுப்புடன் ஆடி நல்ல இணைப்பாட்டத்தை கொடுத்த கங்குலியை நீக்கியது துரதிஷ்டவசமானது.

அவரை நீக்குவது பற்றி நினைத்து பாாக்கக் கூட முடியாது ஒருநாள் போடடிக்கான அணியில் கங்குலி புறக்கணிக்கப்பட்ட போது வெற்றி பெறற அணியில் மாற்றம் செய்ய முடியாது என்றவர்கள் இப்போது மட்டும் எப்படி மாற்றம் செய்தார்கள். இந்த முடிவுக்கு உள் நோக்கம் உள்ளது. போட்டி அடிப்படையில் அவரை நீக்கியதாக சொல்ல முடியாது இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. என்று தேர்வுக் குழுவினருக்கு



கண்டனம் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் கிரிக்கெட் சங்கமும் கங்குலி நீக்கப்பட்டதை கடுமையாக கண்டித்துள்ளது. கொல்கத்தா கிரிக்கெட் ரசிகர்களும் கொதித்துப் போயுள்ளனர். அகமதாபாத் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி வருமாறு. ராகுல் டிராவிட் (தலைவர்), வீரெந்திர செவாக், வாசிம் ஜாபர், காம்பீர், வி.வி.லக்ஸ்மன், சச்சின் டெண்டுல்கர், யுவராஜ் சிங், முகமது கைப்., மகேந்திரசிங் டொனி, இர்பான் பதான், அனில் கும்ளே, அஜித் அகாகர் ஹர்பஜ் சிங், முரளி கார்த்திக; ஆர். பி.சிங். (த-39)

## விளையாட்டு செய்திகள்

# இலங்கையுடனான இரண்டாவது டெஸ்டில் — இந்தியா 188 ஓட்டங்களால் வெற்றி

இந்தியா - இலங்கை அணிகளிடையே புதுடில்லி பெரொசா கொட்லா மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 188 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதையடுத்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி இறுதிநாள ஆட்டத்தைத் தொடர்ந்தது 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த ஜெயவாத்தனாவுடன் முபாரக் இணைந்தார். இருவரும் நிதானமாக துடுப்பெடுத்தாடினார்கள். எனினும் முபாரக் 3 ஓட்டங்களுடன் அகாகரின் பந்து வீச்சில் எல்.பி டபுள்ஸ்யூ முறையில் ஆட்டமிழந்தார். இன்னும் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினால் வெற்றி பெற்றுவிடலாம் என்ற நிலையில் இந்திய வீரர்கள் உற்சாகமாகப் பந்து வீசினார்கள்.

ஆனாலும் இலங்கை அணியின் 7 விக்கெட்டுக்களால் ஜெயவாத்தனாவுடன டில்சானும் இணைத்து பொறுப்பாகவும் வேகமாகவும் துடுப்பெடுத்தாடினாார்கள். இதனால் இல ்கையில் ஸ்கோர் அதிகரித்தது



எனினும் கும்,ளேயின் சுழல் பந்து வீச்சில் டில் சான் 32 ஓட்டங்களுடன் போல்ட்டாகி ஆட்டமிழந்தார்.

ஜெயவர்த்தனாவும் டில்பானும் 7வது விக்கெட்டுக்காக 68 ஓட்டங்களை



இணைப்பாட்டமாகப் பெற்றனா. பின்னா 8வது விக்கெட்டுக்காக ஜெயவர்தனாவுடன் இணைந்த சமிந்தவாஸ் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடினார்.

ஜெயவர்தனா இந்தத் தொடரில் மூன்றாவது அரைச் சதத்தைப் பெற்றார். ஜெயவர்த்தனா 67 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் சுழல் பந்து வீச்சில் காம்பீரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வாஸ் உடன் முரளி இணைத்தார். எனினும் கும்ளேயின் சுழல் பந்து வீச்சில் சமிந்த வாஸ் 17 ஓட்டங்களுடன் ஹர்பஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டில்கார பெர்ணாண்டோ இணைந்தார். எனினும் முரளி 2 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்து வீச்சில் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தர். இலங்கை அணியினர் இரண்டாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்கையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இந்திய அணி 188 ஓட்டங்களால வெற்றி பெற்று தொடரை 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்ட நாயகாக இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 10 விக்கெட்டுக்களைப் பெற்ற சுனில் கும்ளே தெரிவானார். அடுத்த போட்டி அகமதாபாத்தில் 18-22 திகதி வரை நடைபெறவுள்ளது. (த-39)

# குதிரையோடியவருக்கு தண்டனை

(கொழும்பு)

தற்போது நடைபெறும் கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவருக்காக உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் விடை எழுதியமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கோட்டே ஆனந்த சாஸ்திராலய பரீட்சை நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகவும் சம்பந்தப்பட்ட இரு மாணவர்களும் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கபபட்டுள்ளார்கள என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க இது பற்றித் தெரிவிக்கையில் இந்த இரு மாணவர்களும் எதிர்காலத்தில் எந்தவொரு பரீட்சைக்கும் தோற்ற முடியாது என்றும் தற்போது நடைபெறும சாதாரணதரப் பரீட்சையில் இதனைத் தவிர எந்தவிதமான மோசடி நடவடிக்கையும் நடைபெறவில்லையென்றும் கூறினார்.

இலங்கையில் நடத்தப்படும் பரீட்சைகளுக்குத் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் சிறந்த தரத்தை நிச்சயிக்கவென சட்டங்களும் பிரமானங்களும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன என்றும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (த-7)

# குற்றவாளிகள் கைதாகினர்

(அனுராதபுரம்).

பலகுற்றச் செயல்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த இரண்டு பேரை அனுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் நிலையத் தலைமையகத்திற்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படட மேலதிக விசாரணைகளின் போதே இவர்கள கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அநுராதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது ரி-56 ரக துப்பாக்கியொன்று, 4 மகசின்கள், 130 தோட்டாகள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

அநுராதபுரம், சாலியபுரம் காட்டுப் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதே இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை பொலிஸார் மேலும் விசாரணை செயது வருகின்றனர். (த-9)

## திறக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 18ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமையும், ஜனவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ் மாவட்டத்திலுள்ள சிகை அலங்கார நிலையங்களை திறப்பதற்கு யாழ் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியம் அனுமதி அளித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் 25ஆம் திகதி நத்தார் பண்டிகை தினம் பொது விடுமுறை தினமாகும். (ற)

## நடத்துனர்கள் அசமந்தம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி பகுதியில் தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற சில பஸ் நடத்துனர்கள் மிகுதிப் பணத்தைக் கொடுப்பதில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என பயணிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

எனவே இச் செயல் இனிமேல் நடக்காத வண்ணம் தென்மராட்சி தனியார் போக்குவரத்து சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் தெரிவிக்கின்றனர். (த-37)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்தியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடந்து வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு பெரிய புராணத்தொடரில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார். (த-35)

# உத்தேச புனர் நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபை

(கொழும்பு)

உத்தேச புனர்நிர்மாண அபிவிருத்தி அதிகார சபை அடுத்த வருடம் முற்பகுதியில் நிறுவப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தேசத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்திக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான விசேட ஆலோசனைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளதாக அமைச்சின் செயலாளா தெரிவித்துள்ளார்.

புதிய அதிகார சபை உருவாக்கப்படடதும் புனரமைப்பு நடவடிக்கைள் தொடர்பாக செயற்பட்டுவரும் அரசாங்க நிறுவனங்கள் அனைத்தும் புதிய அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்படவுளளது.

அதனூடாக மீள் குடியேற்ற நடவடிக்கைகள், சுனாமிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்தராஷபக்ஷவின் நேரடி கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# நவீன தொலைத் தொடர்பு தொ.நுட்பங்கள் அறிமுகம்

(கொழும்பு)

சர்வதேச தரத்திலான தொலைத் தொடர்பு தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்குப் பல அனுகூலங்களை வழங்க தற்போது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தபால், தொலைத் தொடர்புகள் மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சர் டி.எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூர் தொழில் முயற்சிகள் உரிய முறையில் நெறிப்படுத்தப்படும் போது அதன மூலம் மக்கள் பல முன்னேற்றங்களைப் பெற முடியும்.

முக்கியமாக எல்லா வகையிலுமான தொலை பேசிகளில் உச்சக் கட்டபய்னாக இலகுமுறையிலும் குறைந்த செலவிலும் பாரிய பணிகளை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்ர் மேலும் கூறினார். (ற-7)

(...ம் தொடர்ச்சி)

என்னிடம் வரும் ஒவ்வொரு ஜோடியுமே குழந்தையும் கையுமாகத் திரும்ப வேண்டுமென்பதே என் ஆசை என்கிறார் டாக்டர் ஜமுனா.

"எந்தத் துறையாக இருந்தாலும் அதில் ஒரு பெண் முன்னுக்கு வருவது சுலபமல்ல. பல போராட்டங்களையும் சவால்களையும் சந்தித்தாக வேண்டும். நானும் அதற்கு விலக்கல்ல. தொழில், தனிப்பட்ட வாழ்க்கை இரண்டிலுமே பல சோதனைகளையும் வேதனைகளையும சந்திக்க வேண்டியிருந்தது. போராட்டம் என்பது வாழ்க்கையில் பலருக்கும் எப்போதாவது வரக்கூடும. எனக்கோ வாழ்க்கையே போராட்டம்தான்.

அத்தனை ரணங்களுக்கும் மனக் காயங்களுக்கும் மீறி எனக்கு ஆறுதலளிக்கும் ஒரே விஷயம் என் மருத்துவத்தால் பிறக்கும் குழந்தைகளின் கள்ள மில்லா மழலைச் சிரிப்பும் அக்குழந்தையைப் பெற்ற பெற்றோரின் விதவிதமான நன்றிகளும் தான். அந்த வகையால் இந்த மருத்துவ சேவை எனக்கு ஆத்ம திருப்தியைத் தருகிறது என்றார் டாக்டர் ஜமுனா.

நன்றி: ஆனந்தவிகடன்

# திருமுருக கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு


75

## திருப்புகழ் கோஷ்டி

நான் விரிவுரை செய்வதுடன் தேவாலயங்களில் திருவுலாவின் பொழுது சுவாமிக்கு பின் திருப்புகழ் கோஷ்டி செய்து விரிவுரைபுரிவேன். ஆயிரக்கணக்கான ஜனங்கள் என்னைத் தொடர்ந்து வந்து கேட்டு மகிழ்வார்கள். திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, பூவாளுர், உறையூர், திருச்செநதூர், அம்பா சமுத்திரம் முதலிய ஊர்களில் திருவிழாவின பொழுது திருப்புகழ் கோஷ்டி செய்வேன். அந்த கோஷ்டி விரிவுரைகளைக் கேட்டுப் புலாலை மறுத்துச் சைவம் ஆனவர்கள் பலர்.

திருவானைக்காவில் பஞ்சப்பிராகாரம் என்று ஒரு விழா நடைபெறும். இரவு 9.30 மணிக்குக் கோஷ்டி தொடங்குவேன். இடையிடையே கோஷ்டியில் பாடுகின்ற திருப்புகழுக்கு விாிவுரை புரிவேன். ஜனங்கள் வீதியிலமர்ந்து உருக்கமாகக் கேடபார்கள். நான்காம் பிராகாரம் சுற்றி ஐந்தாம் பிராகாரத்தில கிழக்குக் கோபுர வாயிலுக்கு வரும்பொழுது, பொழுது விடிந்துவிடும். திருப்புகழைக் கேட்க ஆதித்த பகவானும் உதித்து வருவார். அந்த நேரத்தில் உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகிவரும். காலை 8 மணிக்குத்தான் கோஷ்டி முடியும். அதுவரையிலும் ஜனங்கள் பக்திநெறியில் ஆழ்ந்து பரவசப் பட்டிருப்பார்கள். குறைந்தது 4 அல்லது 5 மைல் நடந்து கோஷ்டி செய்வேன். இப்பொழுது அதனை எவ்வாறு செய்தோமென்று எண்ணுகின்றேன்.

அந்தக் காலத்தில் நின்று கொண்டுதான் விரிவுரை புரிவேன். விரிவுரைக்கென்று படிப்பதோ, விஷயங்களைத் தொகுத்துத் தயாரிப்பதோ கிடையாது. விரிவுரைக்கென்று எழுந்து நினறால் பேசும் பொருள்கள் அணி அணியாக என் முன்னே வந்து நிற்கும், நீண்ட நாடகளுக்குப் பின்தான் இருந்து விரிவுரை செய்யலானேன். அப்பொழுது 3 அல்லது 4மணி நேரம் சளைக்காமல் விரிவுரை செய்வேன்.

## வழிபாட்டின் மகிமை

நான எங்கள் வீர சைவ குலாச்சாரப்படி 5 வயதிலேயே திருவண்ணாமலை பாணி பாத்திர தேவர் மடத்தில் சிவலிங்கதாரணம் செய்துகொண்டேன். (பெண்களுக்கும் சிவலிங்க தாரணம் உண்டு.) 1936இல் மதுரை திருப்புகழ் சுவாமிகள் மறைந்துவிட்டார். அவர் செய்திருந்த பூசா மூர்த்தி என்னிடம் சேர்ந்தது. அந்த மூர்த்திக்கும் எனக்கும் பொருத்தமில்லையென்று சிற்பி கூறினார். அப்பொழுது நான் வயலூரில் திருப்பணி செய்துகொண்டிருந்தேன்.

எனக்கு வயலூர் முருகன் உபாசனாமூர்த்தி. ஆதலால் வயலூர் மூலஸ்தான முருகனைப்போல் என்னுடைய நட்சத்திரம், கைவிரல் அளவு இவைகளைப் பார்த்து பஞ்சலோகத்திருவுருவம் அமைத்து வழிபாடு செய்யத் தொடங்கினேன். இந்த வழிபாடு தொடங்கி இப்பொழுது 44 ஆண்டுகள் ஆகின்றன. இப்பொழுது 1979நடைபெறுகிறது. நான் பூசை தொடங்கிய ஆண்டு 1936. அதே ஆண்டில்தான் திருப்புகழ் சுவாமிகள் மறைந்தார்கள். அதேஆண்டில் தான் திருப்புகழமிர்தம் என்ற பத்திரிகை தொடங்கினேன்.

நான் முருகனைப் பூசிக்காமல் தண்ணீரும் அருந்துவதில்லை என்ற நியதியை உடையவன். வடக்கே பத்ரிநாத், கேதாரநாத், பசுபதிநாத், அமர்நாத் முதலிய கடினமான யாததிரைகள் செய்த பொழுதும் என்னுடைய பூசா மூர்த்தியை அதிகப் பணம் கொடுத்து கூலியாட்கள் சுமந்துவர, எத்தனை நேரமானாலும் வழிபாடு முடிந்த பின்னரே உணவு செய்வேன். இமாலய யாத்திரையின் பொழுது எழுந்தவுடன் இரும்புக் கூருடன் கூடிய தடியைப் பிடித்துக்கொண்டு மலையேறத் தொடங்குவேன். பகல் 12 மணிவரை நடந்து அதற்குமேல் பனிக்கட்டி உருகிவரும் கங்கையில் நீராடி வழிபாடு செய்வேன். ஒவ்வொரு நாளும் பகல் 2 மணிக்குத்தான் உணவு செய்ய நேரும். என்னுடன் வந்தவர்கள் வழி நெடுகத் தேனீர் பருகுவார்கள். அப்படிப் பருகியவரெல்லாரும் நோய் வாய்ப்பட்டார்கள். நான் ஒருவன்தான் பிணி அணுகாது ஆரோக்கியமாக வந்தேன்.

இந்த 44 ஆண்டுகளாக நான் குளிக்காத நாளோ, வழிபாடு செய்யாத நாளோ கிடையாது. வழிபாட்டின் மகிமையை உணர்த்த இது ஒன்றே போதிய சான்றாகும்.

முருகப் பெருமானுடைய அருகில் இச்சா சக்தியாகிய வள்ளியம்மையார் வலப்புறத்தும், தெய்வயானை அம்மையார் இடப்புறத்தும் விளங்குவர். வள்ளியம்மையாா திருக்கரத்தில் தாமரை மலரும், தெய்வானை அம்மையார் திருக்கரத்தில் நீலோதபல மலரும் இருக்கும். இதற்கு என்ன காரணம்? தாமரை மலர் சூரியனை கண்டு மலரும. நீலோத்பலம் சந்திரனைக் கண்டு மலரும். முருகப்பெருமானுடைய திருமுகததில் நெற்றிக்கண் அக்கினி. வலக்கண் சூரியன். இடக்கண் சந்திரன். வலப்பக்கம் உள்ள வள்ளியம்மையார் திருக்கரத்தில் விளங்கும் தாமரை முருகப் பெருமானுடைய இமையா நாட்டம் ஆகிய வலக் கண்ணாகிய சூரிய ஒளிப்பட்டு 24 மணி நேரமும் மலர்ந்த வண்ணமாக இருக்கும். அதேபோல் இடக்கண்ணாகிய சந்திர ஒளிபட்டு தெய்வானை அம்மையாரின் திருக்கரத்தில் இருக்கும் நீலோத்பலம் 24 மணி நேரமும் குவியாமல் மலர்ந்த வண்ணமாகவே இருக்கும். இப்பொழுது ஓவியம் வரைபவர்கள் வள்ளியம்மை தெய்வயானையம்மை என்ற இருவர் கரங்களிலும் தாமரை மலரையே எழுதி விடுகிறார்கள். தெய்வயானை அம்மையார் திருககரத்தில் தாமரை மலர் இருக்குமானால் அது சந்திர ஒளிபட்டு 24 மணி நேரமும் குவிந்த வண்ணமாகவே இருக்கும். ஆகவே ஓவியம் எழுதுகின்றவர்கள் தெய்வயானையம்மையார் திருக்கரத்தில் நீலோத்பலம் வைத்து எழுதவேண்டும்.

இதன் நுண்பொருள் முருகப் பெருமானைப் பயன் கருதாமல் பக்தியுடன் வழிபாடு புரிபவர்களின் வாழ்வு எப்பொழுதும் மலர்ந்திருக்கும் என்பதாகும். அடியேனுடைய வாழ்வு ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை ஒன்றுபோலவே அமைந்திருக்கின்றது. எனவே கந்தவேளை எந்தவேளையும் பயன் கருதாமல் பக்தி பரவசத்துடன் வழிபாடு செய்யவேண்டும்.

எனக்கு ஒரு சமயம் ஏழரை நாட்டுச் சனி வந்தது. அதனால் எனக்கு ஏதும் இடர் விளையவில்லை. என் தமையனாரிடத்தில் என் ஜாதகத்தைக் காட்டி "இப்பொழுது எனக்கு 7 1/2 நாட்டுச் சனியாயிற்றே! துன்பத்தின் நிழல்கூட எனக்குத் தெரியவில்லையே!" என்று கேட்டேன். அவர் "நீ முருகனை உபாசிப்பதால் சனி முதலிய க்ருஹங்களால் உனக்குத் தீங்குவிளையாது" என்று கூறினார்.

சிந்தாதிரிப்பேட்டையில் வசிக்கும் பிரபலமான ஜோதிடர் ஆ.கங்காதரன் நாயரிடம் என்னுடைய ஜாதகத்தைக் காட்டினேன். அவர் "முருக உபாசகராகிய தங்களுக்குக் க்ருஹங்கள் ஒன்றும் செய்யமாட்டா. ஜோதிடம் சொன்னால் பலிக்காது' என்று கூறிவிட்டார்.

(தொடரும்)







**பருத்தித்துறை முனைக் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 'சிறுவர் பாதுகாப்பு' இலங்கை அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வோதயத்தால் 2ஆம் கட்டமாக பயனாளிகளுக்கு கட்டுமரம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்டபடங்கள்.**

**சர்வோதய மாவட்ட இணைப்பாளர் அ.கி.சிவசுப்பிரமணியம பயனாளி ஒருவருக்கு வலைகள், கட்டுமரம் வழங்குவதை முதலாவது படத்திலும், சர்வோதய வெளிக்கள உதவியோகத்தர் ஒருவரால் பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும் இரண்டாவது படத்திலும், பயனாளிகள் கட்டுமரங்களுடன் இருப்பதை 3ஆவது படத்திலும் காணலாம்.**

# புன்னைக்குடாவில் கடற்படைத்தளம் அமைப்புக்கு மீனவர்கள் ஆட்சேபம்

(ஏறாவூர்)

ஏறாவூர் புன்னைக்குடாவில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் முகாம் நிறுவப்படுமானால் களுவன்கேணி, புன்னைக்குடா, தளவாய் மற்றும சவுக்கடி மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடாத அளவு பாதிப்பை எதிர்நோக்க வேண்டிவரும் என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போர்க் காலத்தில் மீன்பிடித் தொழில் படைத்தரப்பினரால் பாதிக்கப்பட்டது. பின்னர் சுனாமிப் பேரலையாலும், மீனவர்கள் உயிர் உடமைகளை இழந்து பொருளாதார ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந் நிலையில், புன்னைக் குடாவில் கடற்படை முகாம் நிறுவப்படுமானால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கடல்வலயப் பாதுகாப்பினை கடற்படையினர் ஏற்படுத்துவதுடன் மீனவர்கள் மீது கட்டுப்பாடுகளையும் மேற்கொள்வர்.

எனவே, புன்னைக்குடா கடற்படை முகாம் நிறுவும் திட்டத்தை கைவிட வேண்டுமென இக்கரையோர மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற)

# இராணுவத்தினர் பயணிக்கையில் பொதுப் போக்குவரத்துக்கு தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் ஊர்திகள் வீதிகளால் செல்லும் போது பொது மக்களின் ஊர்திகள் பயணம் செய்வதற்கு படையினர் தடை விதித்துள்ளனர்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் இருந்த இந்த நடைமுறையை படையினர் மீண்டும் கொண்டு வந்துள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் படையினரால் இத்தடை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. படையினரின் ஊர்தி அணி பயணம் செய்தபோது வீதிகளின அருகில் பொது மக்களது ஊர்திகள, உந்துருளிகள், மிதிவண்டிகள் என்பன நிறுத்தப்பட்டு படையினரின் ஊர்தி அணி சென்றபின்பே அனுமதிக்கப்பட்டன.

இதனால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம தெரிவித்துள்ளனர். இதே வேளை கவச ஊர்தி படையினரின் சுற்றுக் காவல் நடவடிக்கைகளும அதிகரிக்கப்பட்டுள்ள அதே வேளை வீதிகளிலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (ற)

# வாக்காளர் பட்டியலில் பெயர்கள் நீக்கம் நடவடிக்கை எடுக்க ஐ.தே.க. முஸ்தீபு

(கொழும்பு)

வாக்காளர் பட்டியலில் இருந்து வாக்களர்களின் பெயர்கள் நீக்கப்பட்டமை தொடர்பில் அரசியல் நடவடிக்கையொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர்கள் நீக்கப்பட்டமை குறித்து இதுவரை இரண்டு இலட்சம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சுமார் 4 இலட்சம் பேரின் பெயர்கள் வாக்களர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தமை தொடர்பாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்துவதற்காக அடுத்த ஜனவரி மாதம் முதல் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார். (ற-9)

## விவசாயிகள் கௌரவிப்பு

சிறந்த வ்விவசாயிகளைக் கொளரவிக்கும் வைபவம் நாளை மறுதினம் முற்பகல் 10.00 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ் பிரதம விருந்தினராகவும் யாழ்.கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரரேசன் மற்றும் யாழ்.மாவட்ட கால்நடை அபிவிருத்தித்திணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர் பொ.இராமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-7)

## அம்பாறையில்

# பிரதேச செயலகங்கள் முற்றாக ஸ்தம்பிதம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர் சங்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளையினர் சுகயீன லீவுப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அண்மையில் கொல்லப்பட்ட காத்தான்குடி பிரதேச செயலாளரின் கொலையைக் கண்டித்தும் கடந்த வருடம் சுட்டுக் கொல்லப்பட்ட திருக்கோயில் பிரதேச செயலாளருக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இந்த சுகயீன லீவுப் போராட்டம் நடைபெற்றது.

அதேவேளை, அம்பாறை மாவட்ட அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்றும் தமக்கு இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென்று கோரியும் பிரதேசசெயலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர்களும் அம்பாறையில் கூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# விடுதலைப் போராட்ட ஆதரவாளர் திருச்சி ஓட்டோ ஆனந்தராஜ் மறைவு

(சென்னை)

தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்ட திருச்சி ஓட்டோ ஆனந்தராஜ் (வயது 84) சென்னையில் நேற்று முன்தினம் காலமானார்.

இந்திய ரயில்வே துறையில் பணியாற்றி 1974ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற இவர் பின்னர் பெரியார் கொள்கையின் மீது தீவிரமான ஈடுபாட்டோடு இயங்கியவர்.

தமிழீழத் தமிழர்கள் இன்னல்களுக்கு ஆளாசி தமிழ்நாட்டுக்குச் சென்ற காலத்தில் தமிழீழத் தமிழர்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவாக உறுதுணையாக இயங்கியவர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு காலத்தில் தமிழ்நாடு முழுவதும் கடுமையான ஒடுக்குமுறைகள் தீவிரமாக இருந்த போது தமிழ்நாடு காவல்துறையால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுத் தேடப்பட்ட குண்டு சாந்தனுக்கு துணிச்சலோடு அடைக்கலம் கொடுத்தவர் இவர்.

ஆனால் காவல்துறையினர் இவரது இல்லத்தை முற்றுகையிட்டனர். குண்டு சாந்தன் சயனைட் அருந்தி உயிர் நித்தார். அதன் பின்னர் இவர் கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாட்டுக் காவல்துறையினர் முதுமையான வயதிலும் அவரை சித்திரவதை செய்த போதும் கூட "நான் ஒரு பெரியார் தொண்டன் ஏற்றுக் கொண்ட கொள்கைககாக உயிரையும் இழப்பேனே தவிர இலட்சியத்தை இழக்கமாட்டேன்" என்று தொவித்துவிட்டு சித்திரவதைகளை ஏற்றுக் கொண்டார். குண்டு சாந்தனுக்கு அடைக்கலம் கொடுத்ததாக 10 மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார். பின்னர் பிணையில் விடுதலையானார்.

திருச்சி கே.கே.நகர் பகுதியில் வசித்து வந்த ஆனந்தராஜ் குண்டு சாந்தன் மறைவுக்குப் பின்னர் இந்த இல்லத்தில்தான் குண்டு சாந்தன் இறந்தார். என்றும் தன் இல்லத்துக்கு 'தமிழ் நல் உலகம் கூறும் தம்பி பிரபாகரன் இல்லம்' என்றும் கல்வெட்டில் செதுக்கி முதுமையான வயதிலும் உறுதியான தமிழீழப் பற்றாளராக விளங்கினார். தனது இல்லத்தில் தமிழீழத் தேசிய மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துக்கின்ற வகையிலாக துப்பாக்கியும், தொப்பியுமான இலட்சிணையைப் பொறித்து தான் ஒரு விடுதலைப்புலி ஆதரவாளன் என்பதை பகிரங்கப்படுத்தி விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுக் களத்தில் தீவிரமாக இயங்கியவர் அவர்.

ஆனந்தராஜின் மறைவுக்கு தந்தை பெரியார் திராவிடக் கழகத்தின் தலைவர் கௌர்த்தூர் தா.செ.மணி, வீரவணக்கம் தெரிவித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார். (ற)

# அடையாள அட்டை கோரும் படையினர்

(பொன்னாலை)

பொன்னாலை - வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு செல்வதற்கு மீண்டும் அடையாள அட்டைகளைக் கடற்படையினர் கோரி வருகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் கடந்த மூன்று வருடங்களாக தளர்த்தப்பட்டிருந்த அடையாள அட்டை கோரும் முறை, மீண்டும் அமுலுக்கு வந்திருப்பதாகக் கூறியே கடற்படையினர் அடையாள அட்டையை வலியுறுத்தி வருகின்றனர்.

தூர இடங்களில் இருந்து ஆலயங்களுக்கு வரும் மக்கள் அடையாள அட்டை நடைமுறையிலிருப்பது தெரியாது போகவே படையினரால் திருப்பி அனுப்பபபடுகின்றனர்.

இதனால் ஆலய வழிபாட்டுக்கு வரும் மக்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் திருப்பிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. (த-49)

# பொருளாதார அபிவிருத்திக்கு தேசிய விவசாயத் திட்டம்

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கென தேசிய விவசாயத்திட்டமொன்று உருவாக்கப்படுமென்று விவசாய மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விவசாயக் கொள்கை சம்பந்தமான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் இதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

விவசாயப் பிரதியமைச்சர் இது குறித்து கருத்து கூறுகையில் 6 வருட காலத்தினுள் தெளிவான விவசாயக் கொள்கையொன்று நாட்டில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுவிடும் என்று தெரிவித்தார்.

விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டது. (த-9)

## அம்மன் கோவிலில் திருட்டு

நல்லூர் வடக்கில் சில காலமாக ஓய்ந்திருந்த திருட்டுகள் சமீப காலமாக மீண்டும் தலை தூக்க ஆரம்பித்துள்ளன.

அண்மையில் நல்லூர் வடக்கு ஆடிய பாதவீதியில் இருக்கும் பேச்சி அம்மன் கோவில் என அழைக்கப்படும் ராஜேஸ்வரி அம்பாள் ஆலய கருவளையினுள் புகுந்த திருடர்கள் மூலஸ்தானத்திலிருந்த விக்கிரகத்தைப் புரட்டிவிட்டு இயந்திரத்தகடு, அம்பாள் அணிந்திருந்த ஆபரணங்கள் முதலியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற பெருமழையை பயன்படுத்தி இத்திருட்டுச் சம்பவம் நடத்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. (து)

## திருட்டு மின்சரம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் இலங்கை மின்சாரசபையினால் வழங்கப்படும் மின்சாரத்தினை சிலர் மின் இணைப்புப் பெறாத வீடுகளுக்கு திருட்டுத்தனமாக வழங்கி மாதாந்தம் 150 ரூபா அறவிட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் தற்போது இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படுவதனால் தற்பொழுது நடைபெற்றுவரும் க.பொ.த.சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரும் சிர மங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-39)

# மட்டக்களப்பில் கடற்படை முகாம் அமைப்புக்கு கூட்டமைப்பு கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடற்படை முகாம் அமைக்கப்படுவது யுத்த தயாரிப்புக்களின் ஒரு நடவடிக்கைதான் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிர்காமன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் கடந்த செவ்வாய்க்கிழமை பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முப்படைகளின் தளபதி தயா சந்தகிரி விரைவில் யுத்தம் வரக்கூடும் என்று அறிவித்துள்ளார். இது அரசாங்கத்தின் கருத்தையே எதிரொலிப்பதாக உள்ளது.

மட்டக்களப்பில் புதிய கடற்படை முகாம் அமைப்பதும் அரசாங்கம் யுத்தத்தைத் தூண்டுகின்ற செயலாகத்தான் உள்ளது. யுத்தத்தைத் தூண்டுகின்ற அரசாங்கத்தால் எப்படி 8 வீதமான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும்?

வடக்கு- கிழக்கு ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் நாளாந்தம் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. கிழக்குப் பிரதேசத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் மீன்பிடித் தொழிலே நசிந்து போய்விட்டது. கிழக்குப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களை அரசாங்கம் புறக்கணிக்கிறது என்றார். (ற)

# சுனாமி அகதிகளிடம் இலஞ்சம் பெற்ற மீன்பிடி பரிசோதகர் கைது

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கென வழங்கப்பட்ட மீன்பிடிப் படகுகளையும் அவற்றுக்கான மோட்டாரையும் வழங்குவதற்காக, பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் இலஞ்சம் பெற்றாரென்ற குற்றச்சாட்டின் மீது மீன்பிடி பரிசோதகர் ஒருவர் இலஞ்சத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உள்ளூர் மீனவர்களால் வழங்கப்பட்ட தகவலையடுத்து பொத்துவிலில் கடமையாற்றும் மேற்படி பரிசோதகர் கொழும்பிலிருந்து சென்ற புலனாய்வு அதிகாரிகளினால் கடந்த திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஆணைக் குழுவின் புலனாய்வுத்துறை இயக்குநர் தெலல் குருக்கே தெரிவித்துள்ளார்.

ஒவ்வொன்றும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய மீன்பிடி படகையும் மோட்டாரையும் இலவசமாகப் பொறுவதற்குஅருகதையுடைய மீனவர்களிடம் அவற்றை வழங்க தலா 50 ஆயிரம் ரூபா இலட்சமாக இந்தப் பரிசோதகர் பெற்றுள்ளார்.

கிடைத்த தகவல்களின்படி அந்தப் பகுதியில் 120 மீனவர்களுக்கு இப் படகுகளை வழங்கிய வகையில் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் இவர் இலஞ்சமாகப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

50 ஆயிரம் ரூபாவில் 30 ஆயிரம் ரூபாவை அந்தப் பரிசோதகர் மீனவரொருவர் இலஞ்சமாக வழங்கிய போதே அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். மிகுதி 20 ஆயிரம் ரூபாயும் படகைப் பெறும் நேரத்தில் கொடுத்தால் போதுமென அவர் அந்த மீனவரிடம் கூறியிருந்தார்.

கைது செய்யப்பட்டவர் கடந்த திங்கட்கிழமை மொனராகலை மாஜிஸ்திரேட முன் ஆஜர்படுத்தப்பட்டதாக தெலல் குருககே மேலும் தெரிவித்துள்ளார். (து)







யாழ்.போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள புற்று நோய் சிகிச்சைப் பிரிவின் ஒரு வருடப் பூர்த்தி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தயிசாலையில் புற்றுநோய் வைத்திய அதிகாரி ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது புற்று நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. (படங்கள்-பாலமுருகன்)

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 78

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'கண்களால் கைது செய்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான இவர் தற்போது பல்வேறு வேடங்களிலும் கவர்ச்சி காட்டி நடித்து வருகிறார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 78**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-78

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புவரின் முழுப்பெயர் :-..............................

அனுப்புவரின் முகவரி :-..............................

..............................

..............................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 76

சரியான விடை





நடிகை குஷ்பு

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 76இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | ம.யதுர்ஷன்<br>கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | த.பத்மினி<br>வல்வெட்டி,<br>வல்வெட்டித்துறை. |
| மூன்றாம் பரிசு | :- | நா.ஜொஜீபன்<br>சுதுமலை தெற்கு,<br>மானிப்பாய்.<br>யுவசக்தி வீதி. |

### சரியான விடை எழுதிப் பரிசு பெறுவோர் பெயர் விபரம்:

திருமதி S.பாக்கியநாதன், சங்கானை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. க.பிரதாப், நீர்வேலி. த.அரவிந்தன், கோண்டாவில். ம்.தனுராஜ், யாழ்ப்பாணம். ஏ.வாசவி, அரியாலை. ம.மதி, சுழிபுரம். நா.நாகசெல்வம், சங்கானை. இ.யூஜினாமரியா, யாழ்ப்பாணம். செ.பிறேம்நாத், நாச்சிமார்கோவிலடி. சிசிலியா ஏபிரகாம், யாழ்ப்பாணம். வ.சிவாஜி, கரணவாய்கிழக்கு. யோ.நிஷாந்தினி, பருத்தித்துறை. சி.பிரதீபா, ஞானவைரவர் கோயிலடி. சி.சுமன், அல்வாய் மேற்கு. ஜோ.அன்பரசி, பருத்தித்துறை. T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. பொ.ஜெயந்தினி, கரவெட்டி. K.புஸ்பராணி, தம்பசிட்டி.

## சீரான இரத்த ஓட்டத்திற்கு...

திராட்சை, எலுமிச்சை போன்று கிரணிப் பழத்திலும் மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளது. இந்தப் பழத்தில் 75 – சதவீதம் நீர்ச்சத்தும் ஏராளமான தாது உப்புக்களும் நிறைந்துள்ளன.

இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி, உடல் வெப்பம், கோடைகால கட்டி மற்றும் பருக்களைப் போக்கும் வல்லமை உடையது.

சிறுநீரை அதிகளவு உற்பத்தி செய்து தேவையற்ற அசுத்தங்களை வெளியேற்றுகிறது. மலச்சிக்கலைப் போக்கும் தன்மை உடையதாகவும் திகழ்கிறது. கிரணிப் பழத்தை இயற்கை உணவாகச் சாப்பிட்டால் அம்மை, மஞ்சள்காமாலை போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதுடன், வந்தபின் குணமளிக்கவும் உதவுகிறது.

# முக சுருக்கம் எதனால் ஏற்படுகிறது

காலத்தை நம்மால் நிறுத்த முடியாது. ஆனால், வயதாகும் நம் உடலைக் கட்டுக் கோப்பாக வைத்திருக்க முடியும். வீட்டில் வேலை செய்யும் பெண்கள் முதல், அலுவலகங்களில் 12 மணி நேரம் உட்கார்ந்தபடியே வேலை செய்யும் பெண்கள் வரை பெரும்பாலோர் உடல்நலம் மற்றும் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பத்தில் அக்கறை காட்டுவதில்லை என்று ஆராய்ச்சி வல்லுனர்கள் அறிந்துள்ளனர்.

உடலின் உட்புறத்தில் சீரான மாற்றங்களை ஏற்படுத்தினால், உடலின் மேற்புறமும் நல்ல வளம் பெற்றுச் செழிப்புடன் காணப்படும். இதைப் பலரும் புரிந்து கொள்வதே இல்லை. இதற்கு மாபெரும் சான்று தான். பியூட்டி பார்லர்கள். தோற்றத்தில் அழகு கூட்ட என்னென்னவோ செய்து பார்க்கும் நாம் உடலின் உள்ளே இருக்கும் கோளாறுகளைச் சரி செய்வதில் அக்கறை காட்டுவது இல்லை; அதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை.

இதற்கு எடுத்துக்காட்டு தான், அழகுசாதனப் பொருட்களின் விற்பனை வளர்ந்தோங்கி நிற்பது. பியூட்டி பார்லர்களை நடத்தும் பெரும்பாலான அழகுக்கலை நிபுணர்கள், அவரவர் கற்றுக்கொண்ட அழகுக் கலைகளை அப்படியே தனது கஸ்டமர்களிடம் பரிசோதனை செய்து பார்க்கின்றனர். அவர்கள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் சருமத்திற்குத் தீங்கு விளைப்பவையா, இல்லையா என்பது குறித்து யாருமே சிந்திப்பதில்லை.

உதாரணமாக, சில பியூட்டி பார்லரில் முகத்திற்குப் பொலிவு கொடுக்கும் பேஷியல் சிகிச்சைக்குப் பிறகு, ஒரு கிரீம் தடவுகின்றனர். அந்தக் கிரீமைத் தடவினால் சற்று நேரத்தில் முகத்தின் நிறம் கூடி பளிச்சென்று ஆகிவிடும். இதைத் தான் பெரும்பாலான பெண்கள் விரும்புகின்றனர்.

ஆனால் பேஷியல் செய்யும் போது பயன்படுத்தப்படும் பொருட்கள், அதன் பிறகு தடவப்படும் கிரீம்




ஆகியவை இரசாயனக் கலவைகள் நிறைந்தவையா, மூலிகையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவையா மூலிகை தான் என்றாலும் இப்போது பளிச்சென்று காணப்படும் முகம் நாளடைவில் ஏதாவது பாதிப்புக்கு உள்ளாகுமா போன்ற விஷயங்கள் குறித்து யோசித்தால்அழகுக்குக் கொடுக்கப்படும் அதிக அளவுக்கதிகமான முக்கியத்துவம் விளங்கும்.

முகம் எவ்வளவு அழகாய் இருந்தாலும், உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால் தான் அந்த முகத்தில் ஒளிகூடும். ஆரோக்கியத்தைப் பற்றிச் சொல்லும்போது நாம் அன்றாடம் சாப்பிடும் உணவு வகைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பச்சைக் காய்கறிகளும், கீரைகளும், பழங்களும் சிறிதளவு அரிசி/கோதுமை ஆகியவற்றுடன் சேர்த்துச்சாப்பிட்டுவந்தால், நோய்நொடி இன்றி ஆரோக்கியமாக வாழலாம். மலச்சிக்கல் இல்லாமல், மன அழுத்தம் இல்லாமல்,கோபத்தைத் தவிர்த்துத் தினமும் உடற்பயிற்சி செய்து வாழ்ந்தால் உட்புற அழகு, வெளிப்புற அழகு ஆகிய இரண்டும் நம்மை மிளிர வைக்கும். இவை தவிர, பருவ வயது மாற்றங்களினால் உடலில் ஏற்படும் உபாதைகளைச் சரிவர நிர்வகிக்கத் தெரியும் பெண்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றனர்.

இப்போது புரிகிறதா? வெளிப்புறத் தோலுக்கு எத்தனை தான் சிகிச்சை அளித்தாலும், உள்ளே தசைகள் இறுக்கமாக, உறுதியாக இருந்தால்தான் வெளித்தோற்றத்திலும் அழகைக் காண முடியும்.

எனவே, அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளையில், ஆரோக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-82



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 82**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..............................

முகவரி :- ..............................

..............................

..............................

இங்கே வெட்டுக ------------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)சிலப்பதிகாரத்தில் வருவது. (3)குழந்தை (குழம்பியுள்ளது). (4)விவசாயத்திற்குப் பயன்படும் சாதனம். (5) கவின் (இப்படியு மழைப்பர்). (8)திங்களிலொன்று. (10)துதிப்பாடல் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

(1)இவை அழிக்கப்படுவதினால் விலங்குகள் அருகி வருகின்றன. (2)ஒரு நிறம். (6)காதில்லாத இது கூட எமது கடைசி வழிக்கு வராதென்பர். (7)இதனை திருடித் திண்பானாம் கண்ணன் (கீ.மே). (8)இந்த மிருகத்தின் தோல் அழகாக இருக்கும். (9) அண்டத்தை ஆழ்பவன்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 80 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.அடிசில் 4.களனி 5.தா்மம் 6.குணம் 7.புறா 8.கொற்றவன் 9.ஈட்டி

### மேலிருந்து கீழ்

1.அற்புதம் 2.சிரமம் 3.புனிதம் 6.குற்றம் 8.கொடி

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | செ.நந்தாயினி<br>தொட்டிலடி,<br>சங்கானை. |
| இரண்டாம் பரிசு | :- | S.சுகந்தன்,<br>பருத்தித்துறை வீதி,<br>கல்வியங்காடு. |
| மூன்றாம் பரிசு | :- | வே.குமாரசுவாமி<br>பரந்தாமர் வளவு,<br>கரவெட்டி கிழக்கு,<br>கரவெட்டி. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

செ.இராசதேவி, கோப்பாய். கே.அரசேஸ்வரன், அரியாலை. ப.சிவசூரியர், சங்கானை. திருமதி.S.பாக்கியநாதன், சங்கானை.

உள்நாட்டு யுத்தமும், வெளிநாட்டு யுத்தமும் எது வாய் இருந்தாலும் அதிலிருந்து தப்பவேண்டும். ஒரு வரோடு ஒருவர் கொள்ளும் சமாதானமும் நல்லெண்ணமும் சிறந்தன. -பிளேட்டோ

# வலம்புரி

## பழைய பயங்கரவாதத்தை ஞாபகப்படுத்தும் சுற்றிவளைப்புத் தேடுதல்கள்

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இராணுவத்தினர்மீதான தாக்குதல்களைதொடர்ந்து சுற்றிவளைப்புக்கள் நடைபெறுவதாகக் கூறினாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு மாறாக இச்சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவது கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

தாக்குதல் சம்பவங்களை அடுத்து வீதிகள் தோறும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொதுமக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சுற்றிவளைப்புக்களும் இடம்பெறுவது கடந்தகால பயங்கர நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவதாக உள்ளன.

1996ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் அளவில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குள் திரும்பிய மக்கள் மீதான இராணுவ அடக்குமுறை, சுற்றிவளைப்பினூடாகவே இடம்பெற்றது.

தேடுதல் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது அப்பாவி இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்ற விடயம் இதுவரை மர்மமாகவே உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்று மீண்டும் நம்பிக்கையோடு வந்தவர்களுக்கு படையினர் கொடுத்த பரிசு உயிர் அழிப்பாகவே இருந்தது.

படையினரின் இப் பயங்கரச் செயலினால் பொட்டிழந்து ,பூவிழந்து கண்ணீர் வடிக்கும் தமிழ்ப் பெண்கள் இன்னமும் தங்களின் உறவுகள் உயிருடன் இருப்பதாக நம்புகின்றனர்.

என்னே! வேதனை ஆறு ஆண்டுகளாக காணமல் போன தங்களின் பிள்ளைகளை ,குடும்பத் தலைவர்களை, சகோதரர்களை வழிமேல் விழி வைத்து தேடுகின்ற பரிதாபம், இச் சோகங்களை ஆற்றுப்படுத்த வழியின்றி இருக்கும்போது ,மீண்டும் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கு மேலாக யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகை அலுவலகங்கள் மீதும் படையினர் தேடுதல்களை நடத்துவதானது பத்திரிகையாளர்களை அச்சுறுத்துவதாக அமைந்துள்ளது.

ஊடகச் சுதந்திரம் பற்றி உலகம் முழுவதிலும் பேசப்படும் இவ்வேளையில் யாழ்ப்பாணத்து பத்திரிகை அலுவலகங்கள்,பணியாளர்கள் மீதான சோதனை நடவடிக்கைகள் படைத்தரப்பின் மேலாதிக்கப்போக்கை வெளிப்படுத்தி நிற்கின்றன.

எனவே மக்கள் வாழும் பகுதிகளில் இராணுவக்குவிப்பு,சுற்றிவளைப்பு என்பவற்றை கைவிட்டு அமைதியான சூழ்நிலைக்கான வழி முறைகள் பற்றி படைத்தலைமைகள் சிந்திக்கவேண்டும்.

ஓர் இனம் ஆள்வதற்காக இன்னோர் இனம் அடிமைப்படுவதென்பது ஒன்றுக்குதவாத சிந்தனை என்ற உண்மையை படையினர் சிந்திப்பது அவசியமாகும்.

## வட-கிழக்கில் தேர்தல் புறக்கணிப்பு
# புலிகள் அழுத்தம் கொடுத்ததற்கு ஆதாரமில்லை -தேர்தல் ஆணையாளர்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழர்களுக்கு விடுதலைப்புலிகள் அழுத்தம் கொடுத்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நிகழ்ச்சி ஒன்றில் தயானந்த திஸாநாயக்க பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந் நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசுகையில்,

வடபகுதியில் தேர்தலை இரத்துச் செய்வது தொடர்பாக எந்த வழக்கும் தொடரப்படவில்லை. தேர்தலைப புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகள அழுத்தம கொடுத்தமைக்கு எதுவித சான்றும இல்லை:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கூட பலவேறு சந்தர்ப்பங்களில் தேர்தலைப புறக்கணிககுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றன. வாக்களிப்பதற்கு எதிராக யாரும் பரப்புரை செய்யலாம் என்றார். (ற)

# சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார் -ஆறுமுகன் தொண்டமான்

(கொழும்பு)

சிறுபான்மை சமூகக் கட்டமைப்பை உ...க்க ஆளும் தரப்பு முனையும் என்றால் அனைத்து சிறுபான்மைக் கட்சிகளுடனும் இணைந்து செயற்பட தாம் தயாராக இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கட்சி என்ற சமூகத்தினை பிரிக்கும் எண்ணப்பாட்டுடன் சுயநல நிபந்தனையுடன் செயற்படுகின்றவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தமிழோசைக்கு நேற்றுமுன்தினம இரவு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்ட கருத்துக்களை முன்வைததுள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று இ.தொ.கா எடுத்த முடிவு, மக்கள் சார்பாகச் சிந்தித்து எடுக்கப்பட்டது. அதேபோன்று மலையக மக்களும் தங்களது சமூகக் கடடமைப்பினை நிலை நிறுத்தியே வாக்களித்துள்ளனர்.

இதனால் தனிப்பட்ட நபர்களின் சலுகைகளுக்காக சமூகத்தைக காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்திற்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இ.தொ.காவைப் பிரிக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. சுகாதார துணையமைச்சுப் பதவியை வடிவேல் சுரேஸுக்கு வழங்கியிருப்பதன் மூலமே இது பகிரங்கமாக்கப்பட்டுள்ளது. எமது கட்சியினைப் பிரிக்கும் முயற்சிகள ஆளும் தரப்பினரின் உதவிகளுடனேயே மேற் கொள்ளப்படுகின்றன.

இந்தக் காட்டிக்கொடுப்புகளுக்கு எதிராக இ.தொ.கா அவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டும். அடுத்த கட்ட பயணத்திற்கும் நாம் தயார் என்றார். (ற)

# புலிகள்-இராணுவம் சந்திப்பு முயற்சிகள் கைகூடவில்லை
## கண்காணிப்புக்குழு கவலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடரும் படுகொலைகளை நிறுத்துவதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை. ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க வைப்பதற்கு நாம் எடுத்த முயற்சிகளுக்கு இரு தரப்பினரிடமிருந்தும் சாதகமான பதில் எதுவும் எட்டப்படவில்லை என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா படையதிகாரிகளும்,விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் சந்திப்பதன் மூலமே வடக்கு கிழக்கில் இடம் பெறும் அசம்பாவிதங்களை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

வவுனியா நகரில் புளொட் உறுப்பினர் கடத்திச் செல்லப் பட்டது குறித்து விடுதலைப் புலிகளிடம் நாம் விபரங்களைக் கோரியுள்ளோம் எனவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (ற)

# 60புலிகள் ஊடுருவல் கொழும்பில் சல்லடை
## -பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் 60 விடுதலைப்புலிகள் ஊடுருவியிருப்பதாக புலனாய்வுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன எனறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கொழும்பின் அனைத்துப் பகுதிகளிலும் வெடிபொருள்கள் பதுக்கப்பட்டுள்ளனவா? என கடந்த சில நாட்களாகத் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது 100குற்றவாளிகள் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் கடைகள், வீடுகள், சந்தேகத்துக்குரிய இடங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

தென்மாகாண பொலிஸ் அதிகாரி டபிள்யூ.ஜி.பிரதாபசிங்க கூறுகையில், அந்தப் பிரதேசத்தில் கள்ளச்சாராயம் தடுப்பு நடவடிக்கைக்காக 10 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றார். (ற)

# வரவு-செலவுத் திட்ட விவாதம் இன்றும் நாளையும் நடைபெறாது

(கொழும்பு)

இன்றும் நாளையும் வரவு-செலவுத் திட்ட விவாதத்தை நடத்துவதில்லை என்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் வேண்டுகோளுக்கமைய சபாநாயகரின் தலைமையில் கடந்த செவ்வாய்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் பேச்சுவார்த்தைகளை நடத்தி நாடாளுமன்றத்திற்குள் ஆசன ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மஹிந்த சமரசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம், ஜே.வி.பி சார்பில் விமல் வீரவன்ச, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நிமால சிறிபால டி சில்வா ஆகியோர் இநதக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ற)

# NDES கற்கை நெறிக்கு 11 தமிழ் மாணவர்கள் தெரிவு

(சாவகச்சேரி)

கட்டுநாயக்கா தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நிறுவகத்தில தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா (NDES)கற்கை நெறிககு இவ்வாண்டு 11 தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மேற்படி பிரிவின் மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

அம் மாணவர்களின் விபரம் வருமாறு,

வி.ரமேஸ்குமார்(யாழ்ப்பாணம்),வி.பிரகாஸ்(வல்வெட்டித்துறை),ஆர்.தவக்குமரன்(திருகோணமலை),எவ்.என்.பீலிக்ஸ் (பண்டத்தரிப்பு),எஸ்.சதீஸ்(வவுனியா),ரி.சுதன்குகேந்திரா (அரியாலை),எஸ்.விமலநாதன்(இளவாலை),பி.சுதர்சன்(பருத்தித்துறை),ஆர்.நாராயணி (மட்டக்களப்பு), இ.சந்துரு(கல்முனை), எஸ்.ஜனார்த்தனன்(நுவரெலியா). (ற-29)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



சுதந்திரர்களானதும் பைத்தியம் பிடித்தவர்களைபபோல சமுதாயத்தை விட்டு காட்டிற்கு ஓடி குகைகளில் வாழ்ந்து உயிரை விட வேண்டிய அவசியம் இல்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொளவோம். மனிதன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அவனது ஆன்மாவில் எல்லையற்ற சக்தி உள்ளது. அவன் அதை உணரும் திறத்தைப் பொறுத்தே அது வெளிப்படுகிறது.

சுவாமி விவேகானந்தர்

# மகிந்த-ஜே.வி.பியினர் சந்திப்பு பல விடயங்கள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பிக்கட்சியினரை நேற்று முன்தினம் அலரிமாளிகைக்கு அழைத்து கலந்துரையாடியுள்ளார்.

சுமார் 2மணித்தியாலங்கள் வரை இந்த கலந்துரையாடல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையின் இறுதித் தீர்வு தொடர்பாகவே இதன்போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சந்திப்பின் போது வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மற்றும் வடக்கு கிழக்கிலுள்ள பிரதேசபைகளுக்கான தேர்தல் என்பவற்றை நடத்தப்படவேண்டுமென ஜே. வி.பியினர் மகிந்தராஜபக்ஷவினை வலியுறுத்தினர். இதற்கு தாம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மகிந்த உறுதியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ற)

# இலங்கையின் அமைதி முயற்சியில் நோர்வே அரசாங்கம் ஈடுபடும்

## நேற்றைய சந்திப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் ஹொங்ஹொங்கில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோனஸ் கார் ஸ்டொரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

இலங்கை அமைதிமுயற்சிகளில் நோர்வே அனுசரணையாளராக செயற்படுவது மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பாக இரு அமைச்சர்களும் விவாதித்ததாக வெளிவிவகார அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுசரணையாளராக நோர்வே செயற்பட வேண்டும் என்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை நோர்வே அமைச்சரிடம் மங்கள சமர வீர தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குவது தொடர்பிலான வழிமுறைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாகவும் அந்தச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

அமைதிமுயற்சிகளை முன்னெடுப்பதில் அரசு தனது ஈடுபாட்டை வெளிப்படுத்தியமையை இச் சந்திப்பில் நோர்வே அமைச்சர் வரவேற்றுள்ளார்.

நோர்வே தூதுக்குழு விடயங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் மங்கள சமர வீரவிடம் நோர்வே அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-4)

# வீட்டிலிருந்து பொருட்களை ஏற்றிச்சென்ற இராணுவம்



யாழ்.நாவலர் வீதியில், பிறவுண் வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையிலுள்ள வீடொன்றில் இருந்த பொருட்கள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்று யாழ். நகரை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது. அதன்போது அவ் வீட்டினுள் நுழைந்த இராணுவத்தினர் அங்கிருந்தபொருட்களை தமது வாகனத்தில் ஏற்றி எடுத்துச் சென்றனர்.

இதனையடுத்து வீட்டு உரிமையாளர் உரிய தரப்புடன் தொடர்பு கொண்டு முறையிட்டதை அடுத்து அப்பொருட்களை இராணுவத்தினர் மீண்டும் கொண்டு சென்று உரிய வீட்டினுள் இறக்கி வைத்துள்ளனர். குறிப்பிட்ட வீட்டில் விடுதலைப் புலிகளின் மகளிர் அணிக் காரியாலயம் ஒன்று முன்னர் இருந்தமை குறிப்பிடத்தக்கது (ச-132,133)

# ஒரே கட்சியின் கீழ் இணைந்து செயற்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களின் போது தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து ஒரேசின்னத்தில் போட்டியிட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் தலைவரும் உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலப் பகுதியில் நேற்று இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாளை கிளிநொச்சிக்குச் செல்லும் தான் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைசந்திக்கவுள்ளதாகவும் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்திக்கவுள்ளதாகவும் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தமது ஒன்றுபட்ட சக்தியை இந்திய வம்சாவளி மக்கள் வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# பாராளுமன்றத் தொகுதியில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாம்

(கொழும்பு)

பாராளுமன்ற கட்டடத்தில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்படுவதை ஒட்டி பாராளுமன்ற பாதுகாப்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்த போது இந்தக் கஞ்சா பயிரிடப்பட்ட விவகாரம் கண்டு பிடிக்கப்பட்டது.

பாராளுமன்ற கட்டடத்தின் இரண்டாம் மாடியில் உள்ள ஓதியன் அரங்கம் அருகில் இது பயிரிடப்பட்டிருந்தது.இது தொடர்பாக பாராளுமன்ற ஊழியர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாராளுமன்ற பணியாளர்கள் சிலர்தான் இந்தக் கஞ்சாவுக்கு காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# எஸ்.பியை விடுதலை செய்யக் கோரி கரு ஜெயசூரிய ஜனாதிபதிக்கு கடிதம்

சிறையில் உள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய கடிதம் அனுப்பியுள்ளார்.

எஸ்.பி திஸநாயக்கவின் தேக ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளது. அவரின் தாயாரின் நிலையையும் மனைவி மற்றும் பிள்ளைகளின் மனோ நிலையையும் கருத்திற் கொண்டு விரைவாக அவரது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பலமுறை கட்சித் தலைவர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் இது தொடர்பான வேண்டுகோளை முன்வைத்த போதிலும் இது வரை எந்த ஒரு பயனும் ஏற்படவில்லை. புதிய வருடப்பிறப்புடன் ஆறுதல் அளிக்கும் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என கரு ஜெயசூரியவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# யாழ்.நகரை அண்டிய...

பொருட்கள் அனைத்தையும் துருவித்துருவி ஆராய்ந்த பின்னரே மேலே செல்ல அனுமதித்தனர்.

மேலும் இவ்வீதியால் சென்ற ஆட்டோ மற்றும் வான் உள்ளிட்ட சகல வாகனங்களையும் வழி மறித்து அதில் பயணித்தோரை கீழே இறக்கி வாகனங்களின் உட்பகுதிகளை மிக உன்னிப்பாக ஆராய்ந்த இராணுவத்தினர் பயணிகளையும் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர். இதனால் அப்பகுதிகளில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் பொது மக்கள் பீதியுடன் காணப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தில் பரவலாகத் தினமும் இராணுவத்தினர் இவ்வாறு சுற்றிவளைப்புகளையும் தேடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவது பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் அவர்கள் தமது நாளாந்தக் கடமைகளையும் ஒழுங்கு முறையுடன் செய்ய முடியாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக இராணுவத்தினர் மீது தாமே தாக்குதல்களை மேற்கொண்டதாக உரிமை கோரியுள்ள தமிழீழ பொங்கியெழும் மக்கள்படை இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கைதுகள் உடன் நிறுத்தப்படாது விட்டால் ஆயுதப் பயிற்சி பெற்ற தமது படைவீரர்கள் இனி வரும் நாட்களில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடத்த தயாராகவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் பெருமளவு இராணுவத்தினர் நேற்றுக் காலை யாழ். நகரை அண்டிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதால் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என தமிழ் மக்கள் பெரும் பீதியில் உள்ளனர். (ற-132,133)

# இனப்பிரச்சினைக்கு...

நேற்றைய இச்சந்திப்பு நல்லதொரு சினேக பூர்வமான சூழலில் இடம் பெற்றதாகவும் அதன் போது தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு சூழ்நிலைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முன்னர் தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சியுடன் சேர்ந்து அவசியமான பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவது குறித்த தனது முயற்சியின் ஒரு அங்கமாகவே ஜனாதிபதி இக்கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இச் சந்திப்பின் போது ஜனாதிபதி மகிந்த, விடுதலைப்புலிகளுடனான அமைதிப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்க அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நிபந்தனையற்ற ஆதரவைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் அவ்வாறானதொரு ஆதரவினை வழங்குவதற்கு முன்னதாக ஜனாதிபதி ராஜபக்ஷ சமாதான முயற்சிகள் தொடர்பில் தனது மாறாத நிலைப்பாட்டினை தெளிவாக பகிரங்கமாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெய சூரிய, முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, ஊடகப் பேச்சாளர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசின் தரப்பில் ஜனாதிபதி மகிந்தவுடன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, அமைச்சர்களான மைதிலி பால சிறிசேன , நிமால் சிறிபால டீ சில்வா,சுசில் பிறேம ஜெயந்த ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-4)


C.B Computer Academy

T.P No. 021-4590291

Station Road Kondavil.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma in MS Office

Diploma in Internet & E-Mail

Diploma in desktop publishing

Diploma in Computer Hard ware

Diploma in computer Programming (Java,V.B.Net,C++,Pascal)

Grade-10 ICT (Tamil Medium)

Children Program

Start on :-14.12.2005

மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்

நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரபு. கரன் ரோஜா நடித்த

திருநெல்வேலி



கா.நே: 11.00, 02.45, 6.00,(பு.நே)

மனோகரா யாழ்.

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

காலை 10.30 இற்கு இளைய தளபதி விஜய், அசின் நடித்த

சிவகாசி

1.30, 4.30, 7.30, 10.30 காட்சியாக

இன்றுமுதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக

சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த

ஆறு

புதிய காட்சிநேரம்: காலை 10.30, மதியம் 1.30 மாலை 4.30, இரவு 7.30.10.30 (புதியநேரம்)

ராஜா தியேட்டர்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

காட்சி நேர மாற்றம்: 10.30.2.00.5.15.8.15 பு.நே

ஷாம், சினேகா, வடிவேல் நடித்த

ஏ பி சி டி 10.30,2.00

Super Star Hero Tom Cruise in

WAR of the World (English) 5.15,8.15


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.